பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 25 திங்கட்கிழமை (10-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:288

# ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் செய்வது குறித்து அரசு பரிசீலனை!

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு,செப்ரெம்பர்10

**"விடுதலைப் புலிகளுடன் பரஸ்பரம் இணக்கம் காணப்பட்ட யுத்தநிறுத்தம் செய்வதையே அரசு விரும்புகின்றது. எங்களுடைய விருப்பத் தெரிவாக இல்லாவிட்டாலும், ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் செய்வது குறித்துக் கூட நாம் பரிசீலனை செய்கின்றோம்."**

**- நேற்றுமுன்தினம் ரூபவாஹினிக்கு அளித்த பேட்டி ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு கூறியிருப்பதாக 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.**

பரஸ்பரம் இணக்கம் காணப்பட்ட யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்யலாம் என அரசுத் தரப்பினால் அண்மையில் முன்வைக்கப்பட்ட யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள இந்தச் சமயத்தில் -

தடைப்பட்டுப் போயிருக்கும் நோர்வேயின் சமாதான முயற்சிகளை முன்நகர வைக்கும் நோக்கத்துடன் -

முன்னர் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விட்டுக் கொடுப்பான - ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை - இப்போது அறிவிப்பது குறித்துப் பரிசீலிப்பதாக இலங்கை தெரிவித்துள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பலகல்லவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடம் நீடிப்பு!



கொழும்பு,செப்.10

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவின் பதவிக்காலம் மேலும் ஒரு தவணைக்கு (ஒரு வருடம்) நீடிக்கப்பட்டிருக்கிறது.

முப்படைத் தளபதியான ஜனாதிபதி இந்தப் பதவி நீடிப்பை அவருக்கு வழங்கியிருக்கிறார்.

கடந்த ஆண்டு இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற ஜெனரல் பலகல்ல, தனது பதவிக்காலத்தின் முதல் ஒரு வருடத்தை கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதியுடன் நிறைவு செய்திருந்தார். அப்போது அவருக்கு வயது 56.

வழமையாக முப்படைத் தளபதிகளின் சேவைக் காலம் வருடாந்தச் சேவைநீடிப்புக்களை உள்ளடக்கிய நான்கு ஆண்டுகள் ஆகும். ஆனால் இந்த நடைமுறைக்குப் புறம்பாக முன்னாள் இராணுவத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான காலஞ்சென்ற ஜெனரல் சேபால ஆட்டிக்கல 10 ஆண்டு காலம் இராணுவத் தளபதியாகப் பணியாற்றியிருந்தார். (ஐ)

## பயணப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை விரைவில் நீக்கப்படும்!

### இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தகவல்

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கும், வெளியிடங்களில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கும் செல்பவர்கள் பாதுகாப்பு அனுமதிபெறும் நடைமுறை விரைவில் நீக்கப்பட்டு விடும்.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இத்தகவலை நேற்றிரவு வெளியிட்டார்.

பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையை நீக்குவது தொடர்பான யோசனை ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார் என்றும் -

அந்த யோசனைக்கு எமது சம்மதத்தை நாங்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கிறோம் எனவும் -

ஜெனரல் பலகல்ல தெரிவித்தார்.

பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை விரைவில் நீக்கப்பட்டு விடும் என்றும் அவர் கூறினார்.(ஐ-3)

## வெளிநாடுகளில் இருந்து மட்டக்களப்பு ஊடாக புலிகளுக்கு ஆயுதங்கள்?

கொழும்பு,செப்.10

வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரும் ஆயுதங்களைப் புலிகள் தற்போது மட்டக்களப்பு கடற்பகுதி ஊடாகத் தரையிறக்குகின்றனரா?

புலனாய்வு அறிக்கைகள் மூலம் இத்தகவல் தெரியவந்திருப்பதாகப் பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் கடற் போக்குவரத்து மற்றும் ஆயுதக் கடத்தல் என்பனவற்றைத் தடுக்கும் நோக்குடன், நாட்டின் வடகிழக்கு கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கடந்த ஐந்து மாதகாலமாக 'வருண கிரண' என்ற பெயரில் நிரந்தர கடல் முற்றுகையை மேற்கொண்டு வருகின்றனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அனுமதியை நீக்க ஜனாதிபதி இணங்கினார்!

### ஈ.பி.டி.பி. அமைப்பு தகவல்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறும் நடைமுறையை ரத்துச்செய்ய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ஈ.பி.டி.பியின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சித் தூதுக்குழுவினர் ஜனாதிபதியை நேரில் சந்தித்து நடத்திய விசேட பேச்சினை அடுத்து, பாதுகாப்பு முன் அனுமதி பெறும் நடைமுறையை ரத்துச் செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்துப் பாதையை புலிகள் மூடி வைத்திருப்பதன் காரணமாக பொதுமக்களின் போக்குவரத்தும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதும், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதும், நெருக்கடிக்கு உள்ளாகியிருப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் பத்து எம்.பிக்களுக்கும் 3 கோடி ரூபாவுக்கு சொகுசு கார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் வரிப்பணத்தில் இருந்து சொகுசு வாகனங்களை இறக்குமதி செய் வதைக் கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி. அமைப்பு, தற்போது அதன் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 2 கோடியே 80 லட்சம் ரூபாவுக்கு சொகுசுக் கார்களை வாங்கவுள்ளது.

ஒவ்வொன்றும் 28 லட்சம் ரூபா பெறுமதியான ரொயட்டா டபிள் கப்ஸ சொகுசுக் கார்களை ஜே.வி.பி. கொள்வனவுசெய்ய இருப்பதாக 'ராவய' சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்தியன் மாருதி கார்களைத் தவிர வேறு எந்த சொகுசு வாகனங்களையும் வாங்கப் போவதில்லை எனக் கூறியிருந்த ஜே.வி.பி., தற்போது கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவு செய்து புதிய சொகுசுக் கார்களை வாங்கவுள்ளது.

இதேவேளை -

அண்மையில் எம்.பியாக நியமனம் பெற்ற சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த சம்பிக்க ரணவக்கவும் 72 லட்சம் ரூபா பெறுமதியான ரொயட்டா லாண்ட் குருசர் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யவிருக்கிறார்.

நாட்டின் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், ஏனைய 71 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட புதிய ரக கார்களைக் கொள்வனவு செய்ய இருப்பதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

## திலீபன் நினைவு தினத்துக்கு முன்னர் யாழ்நகரைக் கைப்பற்ற புலிகள் திட்டம்

### புலனாய்வு அறிக்கைகள் தொடர்ந்தும் எச்சரிக்கை

கொழும்பு,செப்.10

திலீபனின் நினைவு தினமான எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்நகரைக் கைப்பற்றப் புலிகள் தயாராகிவிட்டதாக புலனாய்வு அறிக்கைகள் தொடர்ந்தும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்து வருவதாக 'சண்டே ரைம்ஸின்' பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கிறார்.

உள்நாட்டுப் புலனாய்வுப் பணியகம் உட்பட, அரச புலனாய்வு ஏஜென்ஸிகள் அனைத்துமே இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்தும் விடுத்து வருகின்றன. பொலீஸ்மா அதிபரின் நேரடி வழிகாட்டலின் கீழ் செயற்படும் விசேட புலனாய்வுப் பிரிவு கடைசியாக வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் இந்த மாதம் 26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக குடாநாட்டைக் கைப்பற்றப் பெரும் தாக்குதலுக்கு புலிகள் ஆயத்தமாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திற்கு அருகே பெரும் எண்ணிக்கையில் புலிகளின் அணிகள் குவிக்கப்பட்டு வருகின்றன.

தீபன் தலைமையில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பெரும் எண்ணிக்கையான போராளிகள் இவர்களில் அடங்குவர். விசேட பயிற்சிபெற்ற 350 போராளிகளைக் கொண்ட ஓர் அணிக்கு வீரமணி என்பவர் தலைமை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பயண அனுமதி முறையை நீக்க யாழ்.எம்.பிக்கள் ஐவர் கோரிக்கை

கொழும்பு,செப்.10

அவசரகாலச் சட்டம் தற்போது இல்லாததால், அந்தச்சட்டத்தின் கீழ் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பயணப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையை ரத்துச் செய்யவேண்டும்.

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவைக் கோரியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சி.சிவமகாராஜா, தி.மகேஸ்வரன், அ.விநாயகமூர்த்தி ஆகியோர் பயண அனுமதி பெறுவதில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் சந்திரானந்த டி சில்வாவுக்கு அனுப்பிய அவசர கடிதத்தில் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

"அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பயண அனுமதி பெறும் நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது தற்சமயம் அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்டது. எனவே

(2 ஆம் பக்கம் பார்க்க)

# வங்கிக் கடன்களைச் செலுத்தவேண்டிய கட்டாய நிலையில் ஈ.பி.டி.பி., இ.தொ.கா.

## பொ.ஐ.மு. - ஜே.வி.பி. உடன்பாட்டை அடுத்து

கொழும்பு,செப்.10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டின் எதிரொலியாக - மக்கள்வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றிடம் இருந்து பெற்ற பெருந்தொகை கடனை அடுத்த 3 மாத காலத்துக்குள் செலுத்தி முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஈ.பி.டி.பி. மற்றும் இ.தொ.கா. ஆகிய இரு கட்சிகளுக்கும் ஏற்பட்டிருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு லோயாட்ஸ் வீதியில் அமைந்துள்ள கட்சியின் சொத்துக்களின் பேரில் 2 கோடியே 50 லட்சம் ரூபாவை ஈ.பி.டி.பி. கட்சி, மக்கள வங்கிக்குச் செலுத்த வேண்டும். அரசு பிணைநின்றதன் பேரிலேயே இந்தக் கடன் பெறப்பட்டதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்பு தெரிவித்திருந்தார்.

ஆனந்தக் குமாரசாமி மாவத்தையில் உள்ள தமது கட்சி அலுவலகக் கட்டடத்துக்காக 22 சதவீத வட்டிக்கு இலங்கை வங்கியிடம் பெற்ற 4 கோடியே 80 லட்சம் ரூபாவை உடனடியாகச் செலுத்த வேண்டிய கட்டாயம் இ.தொ.கா.கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி கடன்பெற்ற எவரும் அடுத்த 3 மாதங்களுக்குள் தமது கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது - என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (ஐ-3)

# ரத்வத்தை ஊழல் பேர்வழி என்று குற்றஞ்சாட்டுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,செப்.10

அமைச்சர்களுக்குள்ளே மிகுந்த ஊழல் பேர்வழி அனுருத்த ரத்வத்தை தான் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறாரா?

ஜனாதிபதி அவ்வாறு கூறியிருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நதீம் அல் ஹக் மற்றும் ஜெரமி காட்டர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். அச்சமயம் ஜனாதிபதி அமைச்சர் ரத்வத்தை குறித்து அங்கு பிரஸ்தாபித்ததாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

தன்னைப் போலவோ அல்லது ஜி.எல்.பீரிஸைப் போலவோ நேர்மையானவர்களின் கைகளில் மின்சக்தித் துறை அமைச்சு விடப்பட்டிருக்குமானால் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை நிரப்பக் கூடிய அளவு பணம் மீதப்படுத்தப்பட்டிருக்கும் என்று அப்போது ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளிடம் கூறியதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை -

இந்த வாரம் அமைக்கப்படவிருக்கும் புதிய அமைச்சரவையில் ஊழல் பேர்வழிகளை ஜனாதிபதி உள்ளெடுக்க மாட்டார் என்று மூத்த அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

ரத்வத்தை மீண்டும் அமைச்சரவையில் இடம்பெறுவாராயின் அது சர்வதேச நாணய நிதியத்தினர் குமாரதுங்கவின் சொல்லையும் செயலையும் நேரடியாகவே எடைபோடுவதற்கு உதவும் என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி அத்துக்கொறளை தெரிவித்தார்.

- இப்படி அந்தப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ-3)

## வன்னியில் படையினர் மூவர் பலி!

கொழும்பு,செப்.10

வனனிப் பகுதியில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூன்று படையினர் உயிரிழந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

புதுக்குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ரோந்து வந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படையினர் இருவர் உயிரிழந்தனர்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள படையினரின் நிலைகள் மீது கடந்த வெள்ளியன்று மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

அதேதினம் பிற்பகல் 4.45 மணியளவில் அந்தப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் -

அந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் இருவர் உயிரிழந்தனர் என்றும் -

தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3)

### ஆர்ப்பாட்டத்தின் போது கைதான

# 19 முஸ்லிம் இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு,செப்.10

மாவனல்லையில் கடந்த மே மாதம் இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரங்களைக் கண்டித்து கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது கைது செய்யப்பட்ட 19 முஸ்லிம் இளைஞர்களுக்கும் எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, அரசுக்குச் சொந்தமான பஸ்களுக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய இரு குற்றச்சாட்டிகளின் பேரில இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மாவனல்லையில் இடம்பெற்ற கலவரங்களின் பின்னணியில் சிங்கள அரசியல் வாதிகள் இருந்ததாக முஸலிம்கள் குற்றம் சாட்டியதும் -

அதை எதிர்த்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டங்களை முஸ்லிம்கள் மேற்கொண்டதும் -

அந்த ஆர்பாட்டங்களை அடக்க பொலீஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவியதும் -

தெரிந்தவையே. (ஐ-3-9)

# மட்டு. கருவேப்பங்கேணியில் அகதிகளின் குடிசைகள் தீக்கிரை!

மட்டக்களப்பு,செப்.10

மட்டக்களப்பு கருவேப்பங்கேணி கிராமத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் குடியிருப்புக்கள் மீது கடந்த சனியன்று பிற்பகல் இனந்தெரியாத கும்பல் ஒன்று நடத்திய தாக்குதலில் பல குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் 38 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உழவு இயந்திரங்களில் கத்தி, வாள், கோடரி சகிதம் வந்த இனந்தெரியாத நபர்களே குடிசைகளுக்குத் தீ வைத்ததுடன் அங்கிருந்த உடைமைகளையும் சேதமாக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இனக்கலவரம் மற்றும் படை நடவடிக்கைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் இந்தக் குடியிருப்பில் வசித்து வந்தன. .

கருவேப்பங்கேணி பாடசாலை வீதியில் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வரும் இந்தக் குடும்பங்கள் குடிசை அமைத்திருக்கும் நிலம் தங்களுக்குச் சொந்தமானது என்று அப்பகுதி வாசிகள் கூறிவந்தனர். இதனால் இரு தரப்பினரிடையேயும் பகைமை நிலவி வந்தது. (ஐ-9)

# ஜேர்மனியில் உண்ணாவிரதமிருக்கும் ஈழத்தமிழரின் உடல்நிலை மோசம்

பேர்லின்,செப்.10

ஜேர்மனியில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் மல்லாகத்தைச் சேர்ந்த லஷ்மணன் பகீந்திரனின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நான்கு ஈழத்தமிழர்களில் இவரும் ஒருவராவார்.

தன்னை நாடுகடத்த வேண்டாம் என்று கோரி இவர் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

15 ஆவது நாளான நேற்று உண்ணாவிரதத்தைத் தொடர்ந்த அவர், மயக்கமடைந்தநிலையில் காணப்பட்டதாகவும் - அவரது உடல்நிலை மோசமாகியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இவரும் மற்றும் மூவரும் கடந்த 17 நாள்களாக ஜேர்மன் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-3-164)

---

**மட்டக்களப்பு....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முற்றுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தே புலிகள் தங்கள் கடத்தல் நடவடிக்கைகளை சர்வதேச கடற்பரப்பு வழியே மட்டக்களப்புக்கு மாற்றிக் கொண்டு விட்டதாகத் தெரிய வந்திருக்கிறது என்றும் -

அண்மையில் இரு தடவைகள் மட்டக்களப்பு வழியாக சிறிய படகுகள் மூலம் புலிகள் கடத்தல் பொருள்களைத் தரையிறக்கியிருப்பதாகவும் -

தகவல் வெளியாகி இருக்கிறது.

பெரும் எண்ணிக்கையான கடற்படையினர், கடற்படையின் பெரும் பகுதி வளத்தைக் கொண்டு விமானப்படையினரின் உதவியுடன் வடகிழக்கு கடலில் நிரந்தர கடல் முற்றுகையை மேற்கொண்டிருக்கின்றனர்.

கடற்படைப் படகுகளும், கடற்படை அணிகள் பலவும் இரவு பகலாக 'வருண கிரண' என்ற இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன.

இதேவேளை -

பல்குழல் எறிகணைகளின் புதிய தொகுதி உட்பட, பெரும் தொகையான ஆயுத தளபாடங்களை ஏற்றிக்கொண்டு கம்போடியாவில் இருந்து வரவுள்ள ஒரு கப்பலை எதிர்பார்த்து புலிகள் காத்திருப்பதாக வெளிநாட்டுப் புலனாய்வுப் பணியகம் ஸ்ரீலங்கா கடற்படையினரை எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

---

## இரு போராளிகள் உயிரிழப்பு

மணலாறுப் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் தமிழீழ தேசிய துணைப் படைவீரரான ரூபச்சந்திரன் (நடராசா ரூபச்சந்திரன் - யாழ்ப்பாணம்) என்பவரும் -

கட்டைஅடம்பன் பகுதியில் அதே தினம் இடம்பெற்ற மோதலில் மாதவன் (நடராசா ரஜீந்திரகுமார்-மன்னார்) என்ற போராளியும் - மரணமானதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

# அம்பாறை சென்ட்ரல் முகாம் பகுதியில் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதல்!

## பீதியால் இரவுவேளைகளில் மக்கள் வெளியேற்றம்

மட்டக்களப்பு,செப்.10

அம்பாறை மாவட்டத்தின் 'சென்றல் முகாம்' பகுதியில் உள்ள பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் 'சென்றல் முகாம்' பொலீஸ் நிலையம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய பின்னர் அங்கு அடிக்கடி ஷெல் வீச்சுக்கள் இடம்பெறுவதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் இரவு நேரங்களில் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களுக்குச் செல்வதாகவும், கடந்த ஒருவார காலப்பகுதிக்குள் பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்; சுமார் 5 வீடுகள் சேதமடைந்துள்ளன.

பத்திற்கும் மேற்பட்ட கால் நடைகள் அப்பகுதியில் இறந்து காணப்படுகின்றன.

இந்தச் ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு முறையிடப்பட்டுள்ளது. (ஐ-9)

## காயம்டைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.10

திருகோணமலை மாவட்டத்தில் மஹிந்தபுர சோதனைச் சாவடியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த வள்ளிநாயகி அரியானந்தம் (கிளிவெட்டி) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இருபொதுமக்களும் சிப்பாய் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

---

**பாதுகாப்பு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பது தெரிந்ததே. இந்த நெருக்கடி நிலை கடந்த சில ஆண்டுகளாக நீடித்து வருகின்றது. எனினும் தரை வழிப்பாதையை மூடி வைத்திருக்கும் புலிகளின் செயற்பாட்டைக் கண்டிக்க வக்கற்ற சில அரசியல்வாதிகள் சட்டப் புத்தகங்களுக்குள் நிவாரணம் தேட முற்பட்டுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்து மற்றும் விநியோகம் என்பன தடைப்படாமல் தொடர, அரசாங்கம் முழு அளவில் பாடுபட்டு வருகின்றது. இருந்தபோதும் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாமலிருக்க சில முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வகையில் பயணிகள் பாதுகாப்பு முன்அனுமதி பெற வேண்டியிருந்தது.

இதனால், பொதுமக்களுக்கு ஏற்பட்டு வந்த சிரமங்கள் தொடர்பாகவும், ஒரு சில இடைத்தரகர்கள் பயன் பெறும் சந்தர்ப்பமாக இது பயன்படுத்தப்பட்டமை குறித்தும் ஜனாதிபதியின் கவனத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்தார். இதன் பயனாக பாதுகாப்பு அமைச்சின் முன்அனுமதியைப் பயணிகள் பெற வேண்டும் என்னும் நடைமுறையை ரத்துச் செய்ய கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இது விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

---

**ஒருதலைப்பட்சமாக...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

சமாதானப் பேச்சுக்கு முன்னர் யுத்தநிறுத்தம் என்ற புலிகளின் முக்கிய கோரிக்கையை முன்னர் நிராகரித்து வந்த அரசினால், கடந்த இரண்டு வாரங்களுக்குள் அதன் கொள்கை நிலைப்பாடு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள இரண்டாவது மிகமுக்கிய மாற்றம் இதுவாகும்.

சுமார் 64 ஆயிரம் பேரின் உயிரைக் காவுகொண்ட இந்தப் 18 வருடப் போருக்கு முடிவு காண்பதற்கான "பேசசுக்கு முன்னர் இணக்கம் காணப்பட்ட யுத்தநிறுத்தத்துக்கு அரசு தயார்" என்று லஷ்மன் கதிர்காமர் முதல் தடவையாகக் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த அறிவிப்பை அடியோடு நிராகரித்த விடுதலைப் புலிகள் ஸ்திரமற்ற அரசுடன் தாங்கள் பேசத் தயாரில்லை என்று அறிவித்திருந்தனர்.

"சமாதான முயற்சிகளில் உள்ள மந்த நிலையை அகற்றுவதற்கான வழி வகைகள் குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது" - என்று கதிராகாமர் இப்போது கூறுகின்றார்.

"சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் அவசியம் என்பது குறித்து தொடர்ந்து நாம் நோர்வேயுடன் கலந்தாலோசித்து வருகின்றோம்.

"இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்தம் உட்பட பேச்சுக்கு முன்னரான உடன்பாடு ஒன்றை இருதரப்புமே இப்போது எதிர்பார்க்கின்றன" - என்றார் கதிர்காமர்.

ஆனால் தமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை குறித்தோ, அது விடயத்தில் அரசின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பது குறித்தோ கதிர்காமர் சூசகமாகத் தன்னும் எதுவும் தெரிவிக்கவில்லை.

- இப்படி 'ரோய்ட்டர்' செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

**திலீபன்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகிக்கிறார்.

கடாபி என்பவரின் தலைமையில் பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட புலிகளின் அணி பரப்பாவடி, சுண்டிக்குளம் மற்றும் நாகர் கோயில் பகுதிகளில் நிலைகொண்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான பெண் போராளிகள் விதுஷா தலைமையில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைப் பகுதியில் நிலைகொண்டுள்ளனர். இவர்களுக்கு அப்பகுதி வயல்வெளிகளில் வைத்து விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

ஆனையிறவை அண்டிய புதுக்காடு, இயக்கச்சி பகுதிகளில் இவர்கள் நிலையெடுத்துள்ளனர்.

இவர்களை விட புலிகளின் சிறிய அணிகள் பல, வல்லிபுரம், அக்கராயன், புதுக்குடியிருப்பு உட்படப் புலிகளின் தளங்களில் பல்குழல் எறிகணை செலுத்திகள் சகிதம் தயார் நிலையில் உள்ளன - என்று விசேட புலனாய்வுப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திலீபன் நினைவு தினத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் புலிகள் ஆயத்தமாவதாகப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்தாலும்கூட அதனை உறுதிசெய்யும் சுயாதீன தரப்பு தகவல்கள் எதுவும் இல்லை என்று இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

*(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)* (ஐ)

---

**பயண....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயண அனுமதிபெறும் நடைமுறையை ரத்துச்செய்ய வேண்டும். அவ்வாறு ரத்துச் செய்யாவிட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்போம்" என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு விமானம் மற்றும் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகளுக்கான பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் பணியில், ஈ.பி.டி.பி. அமைப்பு மேற்கொள்ளும் தலையீட்டை நீக்கவேண்டும் என்று ஜனாதிபதியைக் கோருவதென நேற்று மீண்டும் கூடிய ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் ஆகியோருக்கு இன்று மகஜர் ஒன்றை அனுப்பவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

வட்டுக்கோட்டை, சங்கரத்தை

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர ஆலய

# குடமுழுக்கு பெருவிழா - 10~09~2001

## கோயில் வரலாறு



பிட்டியம்பதி சங்கரத்தையில் ஒரு புண்ணிய பூமி. இது சங்கரர் வழிவந்த பெருமையினார் பரம்பரைக்குரியது. இப்பதியில் அன்றுதொட்டு இன்றுவரை ஒரு புளியவிருட்சம் நின்று வருகின்றது. இவ்விருட்சத்தில் பட்சிசாலங்கள் கூடியிருந்து சுற்றியுள்ள நிலங்களின் விளைபொருள்களை அழித்து வந்தன.

இதை எமது முன்னோராகிய முதன்மையினார் கண்டு அவ்விருட்சத்தை வெட்டி வீழ்த்த எண்ணி, அக்காலத்தில் வட்டுக்கோட்டையில் கிறிஸ்துவ ஆலயம் கட்டும் வேலையில் ஈடுபட்டு நின்ற தச்சர் ஒருவரை அழைத்து அவ்விருட்சத்தைத் தறிக்கும்படி ஏவினார். அந்தத் தச்சர் அதை மறுத்தும் கேளாது தானே அவ்வேலையைச் செய்ய முயன்றார்.

அப்போது அங்கு திடீரெனத் தோன்றிய ஒரு நாகசர்ப்பம் அவரை எதிர்த்துத் துரத்தியது. அவர் ஓடி இளைத்து ஒரு பனைமர நிழலில் நின்றார். அந்நாகம் சற்றுத் தொலைவில் தலை தூக்கி ஆடி நின்றது. இதைக்கண்ட பெரியார் தாம் அபசாரம் செய்து விட்டதை நினைத்து வருந்தித் தமது இடம் மீண்டார்.

அன்றிரவே அழகுமிக்க அம்மை அவர் கனவில் தோன்றி தனக்கு அவ்விடத்தில் ஒரு நிழல் இயற்றும்படி கூறி மறைந்தார்.

இந்நிழலிலே இன்று வளர்ந்து நாம் காணும் பிட்டியம்பதியில் கோயில் வடிவம் தோன்றியது என்பது கர்ண பரம்பரைக் கதையாகும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

அருளானந்தம் சந்திரசோதி,
*ஆலய அறங்காவலர்.*

## பிரதேச சபைத் தலைவரின் செய்தி

சங்கரத்தை பிட்டியம்பதியில் சர்வலோக நாயகியாய் பல்லாண்டுகாலமாய் பக்தர்களை இரட்சித்தும் புளியமர நிழலிலே புதுமைகள் பல புரிந்தவளாம் பத்திரகாளி அம்மையின் கும்பாபிஷேகப் பெருவிழாவில் திரண்டிடுவீர் அனைவீரும். சைவமும் தமிழும் தழைத்தோங்கி நிலைபெற சாந்தியுடன் வாழ்ந்திட வாழ்த்துரைகள் வழங்குகிறேன்.

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

ந.திரிலோகநாதன் - J.P.U.M.
*தலைவர் - வலி. மேற்கு பிரதேச சபை,*
*ஈ.பி.டி.பியின் இந்து சமய விவகாரப் பொறுப்பாளர்.*

## பிரதம குருவின் அருளாசி

வட்டுக்கோட்டை பிட்டியம்பதி திருவருள்மிகு ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆச்சிக்கு இன்று நவகுண்டபட்ச சம்பிரோட்சண மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இந்நன்னாளில் எனது அருள் ஆசிகள் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

விநாயகர், சிவன், சக்தியின் அனுக்கிரகத்தால்தான் யாகங்கள், கும்பாபிஷேகங்கள் நடைபெற வேணும் என்பதை, தக்கனது யாகத்தில் நடந்தேறிய சம்பவங்கள் உணர்த்துகின்றன. யாக பூஜைகளில் யாகன் யாகேஸ்வரியாகவும் ஓம குண்ட அக்கினியின் பிதமா மாதாவாய் வாகன் வாகேஸ்வரியாகவும் அருள் பாலித்து இரட்சிக்கின்றவர்கள் சிவன் சக்தியே. அக்கினியும், அக்கினி காரியமும் சைவ சமயத்தவர்களுக்கு முக்கியமானதாகும்.

அக்கினியில் சொரியும் ஆகுதியும் ஆகுதி மந்திரங்களும், தெய்வங்களையும் தேவர்களையும் மகிழ்விக்கின்றன என்பது ஆகம கோட்பாடாகும். இதனால் கும்பாபிஷேகத்தில் யாக பூஜைகளும் அக்கினி காரியங்களும் முதன்மை பெறுகின்றன.

பத்திரகாளி ஆச்சியின் மகா கும்பாபிஷேக நன்நாளில் இத்தேவஸ்தானத்தை வழிநடத்துகின்ற அறங்காவலர்களும், இவ்வருடம் தேவஸ்தானத்தை வழிநடத்துகின்ற திரு. சந்திரசோதி அவர்களுக்கும் தொண்டர்களுக்கும் அம்பாள் அடியார்களுக்கும் உலகிலே எங்கும் வாழுகின்ற மானுட பிறவி எடுத்தவர்க்கும் சகல ஜீவராசிகளுக்கும் எல்லாம்வல்ல பத்திரகாளி வீரபத்திர கடவுளின் திருவருள் பாலிக்க வேண்டி பிரார்த்தித்து எல்லோரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றும் சுபீட்சமாகவும் சமாதானமாகவும் வாழ என்றும் பிரார்த்திப்போமாக.

*"இன்பமே சூழ எல்லோரும் வாழ்க!"*

சுப்பிரமணிய சுந்தரராஜ குருக்கள்
*கும்பாபிஷேக பிரதம குரு, வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானம்.*

## குடமுழுக்கு விழாவுக்கு நல்லாசி

சைவமும் தமிழும் திகழ்ந்து தானமும் தருமமும் தனமும் ஒருங்கே விளங்கும் புண்ணிய பூமியாகிய ஈழமணித் திருநாட்டின் சங்கரத்தைப் பகுதியில் இயற்கை வளமும், வனப்பும் எழிலும் வயல்களும் சூழ தெய்வீகத் தன்மை மிளிரும் பிட்டியம் பதியில் மூர்த்தி, கீர்த்தி, தீர்த்தம், தலம், தலவிருட்சம் ஆகிய சிறப்புக்களுடன் மந்திரமயமான சிம்மாசனத்தில் அம்மை அப்பனாக எழுந்தருளியிருந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு, தீராநோய் தீர்த்தும், வேண்டும் வரங்களைக் கொடுத் தும் சாந்தி திருவருள் நல்கிவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமிக்கும் ஏனைய பரிவார தேவர்களுக்கும் குடமுழுக்குப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது.

இந்தப் பெருஞ்சாந்தி விழா இனிது நிறைவேற "என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை இனித் தெய்வமே உன்செயல்தான் என்று உணரப்பெற்றேன்" என்ற பட்டினத்தடிகளின் வாக்கிற்குக்கிணங்க அம்மை அப்பனது பாதார விந்தங் களை மனத்தின்கண் இருத்தி எனது நாவினால் நவிலவல்ல ஆசிகள் அனைத் தையும் தெரிவிப்பதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

நா.ஜெயரஞ்சிதன்,
*சமாதான நீதிவான*


## விளம்பர அன்பளிப்பு

**E.S. பேரம்பலம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சக நிறுவனம்
**கஜமுகன் ஹாட்வெயர்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| **மிலேனியம் படப்பிடிப்பாளர்கள் போட்டோ அன் வீடியோ**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **சுட்டி பாம் சென்ரர்**<br>வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. | **ஸ்ரீ ராஜ் தொலைத்தொடர்பகம்**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. |
| **அம்பாள் ஸ்ரோர்ஸ்**<br>அற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை. | **ஸ்ரீ ஸ்ரோர்ஸ்**<br>**உதயன் பத்திரிகை முகவர்**<br>துணவிச் சந்தி. | **பாலன் அரைக்கும் ஆலை**<br>மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. |
| **சண்முகம் களஞ்சியம்**<br>சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. | **ஒளிக்கதிர் அழகுமாடம்**<br>சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. | **போஸ்கோ புத்தகசாலை**<br>ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| **சச்சியா இரும்பகம்**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **ஆனந் சலூன்**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **வலம்புரி அழகுமாடம்**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. |
| **புதிய சாந்தி அரைக்கும் ஆலை**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **கோகுலன் குளிர்சோலை**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **சீலன் ஸ்ரோர்ஸ்**<br>நவாலி வீதி, வட்டுக்கோட்டை. |
| **நாதன் சைக்கிள் வேக்ஸ்**<br>மாவடி, வட்டுக்கோட்டை. | **லக்ஸ்சுமி அழகு மாடம்**<br>பிரதான வீதி, வட்டுக்கோட்டை. | **மகேஸ்வரன் பல்பொருள் விற்பனை நிலையம்**<br>சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. |
| **கலைவாணி நகை மாளிகை**<br>111B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **குரு போட்டோ அன் வீடியோ**<br>துணவிச் சந்தி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. | **ரூபன் சலூன்**<br>கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை. |
| **கணேசன் ஸ்ரோர்ஸ்**<br>கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | **சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**<br>பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். | **சிவன் ஒட்டுவேலைத் தொழிற்சாலை**<br>நவாலி வீதி, சங்கரத்தை. |

## — [புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்] —
## குடாநாட்டின் பாதுகாப்புக் குறித்து
# தேசிய பாதுகாப்புச் சபை ஆராய்வு

கொழும்பு, செப் 10

யாழ். குடாநாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் தேசியப் பாதுகாப்புச் சபை ஆராய்ந்துள்ளது.

யாழ். குடாநாட்டை மீளக் கைப்பற்றப் புலிகள் முனைப்புடன் ஆயத்தங்களில் இறங்கியுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து அண்மையில் குடாநாடு சென்றிருந்த கூட்டு நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்தை மற்றும் முப்படைத் தளபதிகள் இது தொடர்பான அறிக்கையை இங்கு சமர்ப்பித்தனர்,

இந்தக் கூட்டத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் பங்கு பற்றினர்.

குடாநாடு மீதான புலிகளின் தாக்குதல் முஸ்தீவு குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவும், தேசியப் புலனாய்வுப் பிரிவும் எச்சரித்திருந்தன. இதன் அடிப்படையிலேயே கடந்த மாத பிற்பகுதியில் அங்கு சென்ற ஜெனரல் தளுவத்தையும், முப்படைத் தளபதிகளும் நிலைமையை நேரில் அவதானித்திருந்தனர்.

யாழ். குடாநாட்டின் மீது புலிகளின் உடனடித் தாக்குதலுக்கான வாய்ப்புகளில்லை என்றும், அதேசமயம் குடாநாட்டில் எந்த நிலைமையையும் சமாளிக்கப் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் படைத் தளபதிகள் இந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பு நகரின்பாதுகாப்புக்குறித்தும் இங்கு ஆராயப்பட்டுள்ளது. நகரப் பாதுகாப்புக்கென விசேட படையணிகள் அமைப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

### குடாநாட்டில் நாளாந்த நிகழ்ச்சி
## பஸ் - மினிவான் ஓட்டப்போட்டி; பயணிகள் திண்டாட்டம்

வலி.வடக்கு, செப். 10

குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் தனியார் மினிபஸ்களும் ஒன்றையொன்று முந்துவதில் போட்டி போடுவதால், பாதசாரிகளும் மற்றைய வாகனங்களும் பல்வேறு சிரமங்களை அனுபவிப்பதாகவும், விபத்துக்கள் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முந்திச் செல்லும் போட்டி காரணமாக பயணிகளை இறங்க வேண்டிய இடத்தில் இறக்காமல் வேறு இடத்தில் இறக்கி விட்டு பஸ்களும், மினிபஸ்களும் விரைவதாக விசனம் தெரிவிக்கப்பட்டது.

சில வேளைகளில் பயணிகளை ஏற்றாமல் அவை 'ஓட்டப் போட்டி'யிலேயே கூடிய கவனம் செலுத்துவதால் நீண்டநேரம் வீதிகளில் 'தவம்' கிடக்கவும் நேரிடுகிறது.

பஸ்களும், மினிபஸ்களும், மக்களுக்குப் பயன்தரும் வகையில் சேவையீடுபடச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-86-15)

## எதிர்க்கட்சித் தலைவருடனும் பீரிஸ், திஸாநாயக்க பேச்சு

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வியாழக்கிழமை மாலை சந்தித்துப் பேசிய அமைச்சர்களான ஜி.எல். பீரிஸும், எஸ். பி. திஸநாயக்கவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசியுள்ளதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்கள் இருவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசியதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போது ஜே. வி. பியுடனான தகுதிகாண் அரசாங்கம் குறித்தோ அமைச்சரவையினைக் குறைப்பது குறித்தோ தான் பேசவில்லை என்று அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (க)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 02 — 08 — 1929



விண்ணில்: 10 — 09 — 2000

### Dr. நாகரத்தினம் வாமதேவன்
B. Sc. (Hons)

(ஸ்ரீலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபர் - D.I.M.S. ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி - பொறளை)

ஆண்டு ஒன்று மறைந்தாலும் அகிலத்தில் நாங்கள் இருக்கும் வரை உங்கள் நினைவுகள் நீண்டு கொண்டே போகும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மருமகன், உறவினர்கள்.

71A, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(92091)

## மாதனையில் திருட்டு

நெல்லியடி, செப். 10

அதிகாலை வேளை வீடு ஒன்றினுள் புகுந்த திருடன் ஒருவன் அங்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்திலிருந்து 2 பவுண் பெறுமதியான சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவானான்.

இத் துணிகரத் திருட்டுச் சம்பவம் அண்மையில் புலோலி கிழக்கில் உள்ள மாதனை என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

## தென்னை நாற்றுமேடை

சண்டிலிப்பாய், செப். 10

தொல்புரம் கமநல கேந்திர நிலையத்தில்தென்னைநாற்றுமேடை அமைக்கப்பட்டுள்ளது. 2,000 நல்ல இன தென்னை நாற்றுகள் இம் மேடையில் விதைக்கப்பட்டிருப்பதாகவும், எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் பொதுமக்களுக்கு தென்னம் கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தொல்புரம் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஐ-135)

## மூளை மலேரியா: முற்றாக ஒழிக்க கண்காணிப்புக்குழு

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குடத்தனை, மணற்காடு, பொற்பதி, அம்பன் ஆகிய கிராமங்களில் மூளை மலேரியாநோய் அதிகரித்துள்ளது.

இப்பிரதேசங்களிலிருந்து இந்நோயை முற்றாக ஒழிப்பதற்கு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை தலைமையில் 15 பேர் கொண்ட கண்காணிப்புக்குழு தெரிவாகியுள்ளது.

குடத்தனை தென்இந்திய திருச்சபை வளாகத்தில் இத்தெரிவு அண்மையில் நடைபெற்ற போது அம்பன் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் எம். யோகேஸ்வரதேவர், குடத்தனை தென்இந்திய திருச்சபை அடிகளார் அன்ரனி சுதாகர் உட்பட கிராம சேவை அலுவலர்களும், பெருமளவு பொதுமக்களும் கலந்து கொண்டனர். (க-109)

# உலக அரங்கில்

## விரக்தியுற்ற இளைஞர்கள் நைஜீரிய நகரில் வன்முறை!

லாகோஸ், செப். 10

நைஜீரியாவின் பிரதான நகரமொன்றில் விரக்தியுற்ற பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் மதத்தலங்களுக்குத் தீ வைத்தல் உட்பட வன்முறைக்கலவரங்களில் இறங்கினர்.

ஜோயா என்ற நகரிலேயே நேற்று முன்தினம் இந்த வன்முறைகள் இடம்பெற்றன.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றால் விரக்தியுற்று போதைப்பொருள் பாவனை உட்பட தீய பழக்கங்களுக்கு அடிமையான பெரும் தொகை இளைஞர்கள் திடீரென்று கலவரத்தில் இறங்கினர்.

தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகியன தீக்கிரையாக்கப்பட்டதாகவும் —

பிரதான வீதியைத் தமது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட இளைஞர்கள் வர்த்தக நிலையங்களை அடித்து நொறுக்கியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

நிலைமையை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலீஸாருக்கு துணையாக இராணுவத்தினரும் பணியிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஓ-4)

## காஷ்மீரில் கண்ணித் தாக்குதல்!

ஸ்ரீநகர், செப். 10

ஜம்மு காஷ்மீரில் பாடசாலை மாணவர்கள் பயணித்த பஸ் ஒன்று தீவிரவாதிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கியதில் மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 13 மாணவர் காயமடைந்தனர்.

இதற்கிடையில், காஷ்மீரின் மற்றொரு பகுதியில் தீவிரவாதிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் எல்லைப்பாதுகாப்புப் படைவீரர்கள் 6 பேர் கொல்லப்பட்டனர். (ஓ-4)

## காஷ்மீர் பெண்கள் பர்தா அணிய தீவிரவாதிகள் வற்புறுத்தல்

ஸ்ரீநகர், செப் 10

காஷ்மீரில் உள்ள இஸ்லாமியப் பெண்கள் அனைவரும் 'பர்தா' அணிய வேண்டும் என்றும் லஸ்கர் – இ - தொய்பா என்ற தீவிரவாத அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாமிய நெறிமுறைகளை வலியுறுத்துவதற்காகவே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் 'பர்தா' அணியாது வீதியில் நடமாடிய 3 இஸ்லாமியப் பெண்கள் மீது லஸ்கர்-இ-தொய்பா அமைப்பினர் 'அசிட்' வீசியதில் அந்தப் பெண்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இதேசமயம், காஷ்மீர் இஸ்லாமிய அமைப்புகள் இந்த உத்தரவைக் கண்டித்துள்ளன. வற்புறுத்தலின் மூலம் மத ஒழுக்கங்களைத் திணிக்கக்கூடாது என்று அவை தெரிவித்துள்ளன. (ஓ)

## இந்தியத் திரைப்படத்துக்கு வெனிஸ் விழாவில் தங்க விருது

புதுடில்லி, செப். 10

58 ஆவது வெனிஸ் திரைப்பட விழாவில் இந்தியத் திரைப்பட இயக்குநர் மீரா நாயரின் 'மொன்சூன் வெடிங்' (இளவேனில் திருமணம்) என்ற திரைப்படத்திற்குச் சிறந்த திரைப்படத்துக்கான 'தங்கச்சிங்க விருது' கிடைத்துள்ளது.

உலகின் பழமையான திரைப்படவிழா ஒன்றில் இந்தியத் திரைப்படம் விருது பெறுவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

உலகின் வெவ்வேறு நாடுகளில் பிரிந்து வாழும் பஞ்சாபிக் குடும்ப அங்கத்தவர்கள் திருமணம் ஒன்றுக்காக ஒன்று கூடும்போது பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை மணப்பெண் ஏற்க மறுப்பதே இத் திரைப்படத்தின் கதையாகும்.

வெனிஸ் திரைப்பட விழாவில் இந்த விருதைப் பெறும் முதல் பெண் இயக்குநர் என்ற சிறப்பையும் மீராநாயர் பெற்றுள்ளார். (ஓ-4)

## ஆயுதக் கலாசாரத்துக்கு எதிரான ஆலோசனைக்கூட்டம்

கோனகிரே செப். 10

மேற்கு ஆபிரிக்க வலயத்தில் அதிகரித்துவரும் ஆயுதக்கலாசாரத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அப்பகுதி நாடுகள் ஆலோசனை நடத்தின.

கினிதலைநகர் கொனகிரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், கினி, லைபீரியா, சியாராலியோன் உட்பட பல நாடுகள் கலந்து கொண்டன.

மேற்காபிரிக்க நாடுகளின் நிதியமைச்சர்கள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

தீவிரவாதிகளை நாட்டுக்கு நாடு எவ்வாறு ஒப்படைப்பது என்பது பற்றியும் —

அண்டைநாடுகளில் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள் குறித்தும் —

ஆலோசனைக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

சியாராலியோனில் இடம்பெற்றுவரும் உள்நாட்டு மோதலில் ஈடுபடும் தீவிரவாதிகளுக்கு லைபீரியா உதவுவது உட்பட இதேபோன்ற பிறஅரசியல் தலையீடுகளைத் தடுப்பது தொடர்பாகவும் மேற்காபிரிக்க நாடுகள் ஆலோசனை நடத்தின. (ஓ-4)

# உதயன்

## சூடு கண்ட பூனை மீண்டும் அடுப்பங்கரைக்கு!

இலங்கையில் ஏற்பட்டுவரும் அரசியல், இராணுவ நிலைமைகள் குறித்து உன்னிப்பாகக் கவனித்து வருகின்ற இந்தியா, இலங்கை விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற தனது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றுவது குறித்து தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இலங்கை விவகாரங்களில் வாங்கிக்கட்டிக்கொண்ட - கையைச் சுட்டுக்கொண்ட - இந்தியா மீண்டும் தனது கவனத்தை - கைவரிசையை - இலங்கையின்பால் திருப்புகின்றது.

இலங்கையில் சமவுரிமை கேட்டுப் போராடி வருகின்றார்கள் ஈழத் தமிழர்கள். கொடுக்க மறுக்கின்றது சிங்களப் பேரினவாதம். இதனால் இருதரப்பிடையேயும் மூண்ட அரசியல் பகைமை இன்று கோர யுத்தமாக வெடித்துள்ளது. தர மறுத்ததைப் பிடுங்கி எடுக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள் தமிழ்ப் போராளிகள்.

இந்தப் பிரச்சினைக்கு சமரசம் செய்ய வேண்டுமானால் அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் இணக்கம், இந்த இரு தரப்பிடையேயும்தான் ஏற்படவேண்டுமே ஒழிய, மூன்றாம் தரப்பாக இடையில் மூக்கை நுழைக்கும் மத்தியஸ்தருடன் அல்ல.

ஈழத் தமிழரின் போராட்டத்தை - பகிரங்கமாக இல்லாவிட்டாலும் - மறைமுகமாகவேனும் இந்தியா - இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு - ஆதரித்து, ஒத்துழைப்பு, உதவிகளை வழங்கி ,ஊக்குவித்தது என்பது உண்மையே. அதற்காகத் தங்கள் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை ஈழத் தமிழர்கள் இந்தியாவிடம் தாரைவார்த்துக் கொடுத்திருக்கவில்லை.

ஆனால் இந்தியாவோ சுதந்திரத்துக்குப் போராடும் ஈழத் தமிழ்ப் போராளிகளை பொம்மலாட்டத்தில் தனது கையசைவுகளுக்கு ஏற்ப ஆடும் பொம்மைகளாக நினைத்து - சுதந்திரப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி - நடவடிக்கைகளில் இறங்கியது.

பிணக்குப்பட்டிருக்கும் சிங்கள அரசு - ஈழத் தமிழர் ஆகிய இரு தரப்பிடையேயும் தீர்வுகாண சிங்கள அரசும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்ய முற்பட்டமை இந்தப் பின்னணியில் தான்.

ஈழத் தமிழ்த் தலைவர்களுக்குக் கூடத் தெரியாமல் அவர்களின் - அந்த மக்களின் - தலைவிதியைத் தீர்மானிக்க இந்தியாவும் சிங்கள அரசும் - ராஜீவும் ஜே.ஆரும் - ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்குத் தயாரானது இப்படித்தான்.

ஆயுத மற்றும் தனது வலுக்களைக் காட்டி ஈழத் தமிழ்த் தலைவர்களை அடிபணிய வைக்கலாம் என்று கங்கணம் கட்டிய இந்திய இராஜதந்திரத்துக்கு சரியான பதிலடி தந்தவர் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். ஏனைய தமிழ்த் தலைமைத்துவங்கள் அரசியலில் சோரம் போனபோது புலிகள் மட்டும் அடிபணியாமல் தனித்து நின்று ஈழத்தமிழரின் சுதந்திர உணர்வின் வேட்கையை வெளிப்படுத்தி நின்றனர்.

அதன் விளைவாக வாங்கிக் கட்டிக் கொண்டு காட்சியிலிருந்து விலகியது இந்தியா. தனது அத்துமீறலுக்காக எதிர்காலப் பிரதமர் ஒருவரின் உயிரையே அது விலை கொடுக்க வேண்டியுமாயிற்று.

ஈழ விவகாரத்தில் இந்தியாவின் இத்துணை குளறுபடிகளுக்கும் சூத்திரதாரியாகப் பின்னணியில்-இருந்தவர் இலங்கைக்கான அப்போதைய இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என். டிக்ஸிற்றே என்று வர்ணிக்கப்படுகின்றது.

அவருக்கு அப்போது உதவியாக இருந்த துணைத் தூதுவர் நிருபன் சென்னை கொழும்புக்கான தூதுவராக இடம்மாற்றிக்கொண்டு, மீண்டும் இலங்கை விவகாரத்தில் மூக்கு நுழைக்க முயல்கின்றது இந்தியா.

'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பார்கள். ஆனால் இந்தியப் பூனை மீண்டும் அடுப்பங்கரைக்குள் புகுகின்றது.

தற்போது சூடாக இருக்கும் இலங்கை இனயுத்தம் என்ற பாலில் தனது பொறுப்பை மீறி, இந்தியா வாய் வைக்குமானால் முன்னையதிலும் விட அதிகளவு சூட்டுத் தாக்கத்துக்கு அது இலக்காக வேண்டியிருக்கும் என்பதை அது புரிந்துகொண்டால் நல்லது.

# வடமராட்சிக் கடலரிப்பைத் தடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

யாழ்ப்பாணம்,செப்.10

வல்வெட்டித்துறையிலிருந்து பருத்தித்துறை முனைக்கு இடைப்பட்ட பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ முன்வந்துள்ளது.

அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த உலக வங்கி தூதுக் குழுவினர், இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

திக்கம் கடல் கரை அரிப்பை கடலில் இறங்கிப் பார்வையிட்ட தூதுக குழுவினர், பின்னர் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலுக்கு அருகில் உள்ள கமநல கேந்திர நிலையத்தில் மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தனர்.

இச் சந்திப்பின் போது, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கமநல கேந்திர பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் உட்பட வேறு பல அரச திணைக்களப் பொறுப்பதிகாரிகளும் பங்குபற்றினார்கள்.

கடற்றொழிலாளர்களின் தொழில பிரச்சினை, விவசாய சிறிய பாசனங்கள் புனரமைத்தல், கரவெட்டிப் பகுதிக்கு உவர்நீர் வராது அணைக்கட்டு கட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் அக் குழுவினரிடம் சுட்டிக்காட்டப்பட்டன. (க-109)

## விநாயகமூர்த்தி முயற்சி

கொழும்பு,செப்.10

அரசாங்கத்துக்கு எதிராகத் தான் தனியான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரப்போவதாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசின் மீது தமிழ் மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டார்கள். எனவே ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து இந்த அரசாங்கத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.(ம-4)

## ஆங்கில பயிற்சி வகுப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.10

வடமராட்சி கிழக்கில் பாடசாலையைவிட்டு வெளியேறியோருக்கான ஆங்கில பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பை நடத்துவதற்காக கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(க-182)

## நாட்டு நடப்பு

(கொழும்பில் தண்ணீர் விநியோகம் பாதிப்பு. அதன் பின்னணியில் எழுந்த கவிதை இது)

வட கிழக்கிலங்கை தன்னில்
வாழ்ந்திடும் தமிழர் ஒன்றாய்
இடர்பட்டு வடிக்கும் கண்ணீர்
நிலமகளினை நீராட்டி நிற்க
விடும் அவர் வெப்ப மூச்சு
விரவியே தென்னிலங்கை மேவ
கொடும் அனல் காற்றாய் வீசி
குடி நீரை உறிஞ்சி நிற்கும்
படுதுயர் நீங்க வேண்டில்
பகிர்ந்தளிப்பீர் ஆட்சி தன்னை

*- விகடகவி.*

### நான்கு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதும்

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.கட்சி 24ஆம் திகதிக்குப் பின் சபையில் சமர்ப்பிக்கும்

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 24ஆம் திகதிக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது

அரசுக்கு எதிராக கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஐ.தே.கவினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமையினால் வலுவிழந்து போனதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இதனையடுத்து புதிதாக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்க ஐ.தே.க. நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கையை ஐ.தே.க. ஆரம்பித்துள்ளது. வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்த நடவடிக்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று ஐ.தே.கவின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு கூறுகிறார்.

நான்கு ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான திருத்தச் சட்ட மூலம் எதிர்வரும் 24ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளமையினால் ஆணைக்குழுக்கள் நான்கும் நிறுவப்பட்ட பின்னரே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

### ஜே.வி.பியின் 10 எம்.பிக்களினதும்

# ஊதியத்தின் அரைவாசித் தொகை அரசின் திரட்டிய நிதிக்கு!

பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை அடுத்து -

அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு ஜே.வி.பியின் 10 எம்.பிக்களினதும் ஊதியத்தின் அரைவாசித் தொகையை அரசின் திரட்டிய நிதிக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து கடிதம் ஒன்றை ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சலுகைகள், கொடுப்பனவுகள் உட்பட ஓர் எம்.பிக்கு மாதாந்தம் 34 ஆயிரத்து 100 ரூபா வழங்கப்படுகிறது. இந்தச் சம்பளத்தில் அரைவாசித் தொகையையே திரட்டிய நிதிக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஜே.வி.பியின் எம்.பிக்கள் 10பேரும் தமது ஊதியத்தை தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் -

இந்த ஊதியம் ஜே.வி.பி.எம்.பிக்களின் சம்பள நிதியத்தில் சேர்க்கப்படும் என்றும் ஜே.வி.பி அறிவித்துள்ளது. (க-7)

# அல்லைப்பிட்டிச் சாவடியில் பயணிகள் தீவிர சோதனை

காரைநகர்,செப்.10

தீவுப் பகுதிக்குச் செல்லும் பொது மக்கள் மீது அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தீவுப் பகுதிகளுக்கு கடமை நிமிர்த்தம் செல்லும் அரச ஊழியர்கள் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த சில மாதங்களாக சோதனைச் சாவடியில் அரச ஊழியர்கள் பஸ்களில் இருந்து இறக்கப்படாமல் பஸ்களில் வைத்தே சோதனை செய்யப்பட்டனர். தற்போது இறக்கப்பட்டு தீவிர சோதனையின் பின்னரே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, பண்ணைப் பாலத்தில் இறக்கப்படும் பயணிகள் மீண்டும் 200 யார் தூரத்தில் இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படுவதுடன் பயணிகள் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(க-73)

## நாளை

ஆவணி 26
செவ்வாய்க்கிழமை
திதி: அட்டமி
காலை 7.40 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முன்னிரவு 7.06 வரை.
சுபநேரம்: 10.33 - 12.03
ராகுகாலம் : 3.03 - 4.33
(பழைய நேரப்படி)

## ஆரம்பப் பிரிவு செயற்பாட்டறை அமைப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.10

குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களுக்கான புதிய செயற்பாட்டறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்செயற்பாட்டறை அமைப்பதற்காக கல்வி அமைச்சினால் 90ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (ம-182)

## உதயவாக்கு

"எதிர்பார்ப்புக் குறைவாக இருந்தால் ஏமாற்றம் அதிகமாக ஏற்படாது" *-பீச்சர்*

## பாடநூல்கள் விநியோகம்

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் நாளை காலை 9 மணி முதல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படும் என்று அதிபர்களுக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி காங்கேயன் அறிவித்திருக்கிறார். (க)

## மினி திரையரங்கில் திருடர் கைவரிசை

வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள மினி திரையரங்கும் அருகில் உள்ள இரு கடைகளும் திருடர்களின் கைவரிசைக்கு இலக்கான சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

மினி திரையரங்கில் இருந்த 'புறொஜெக்டர்' இயந்திரமும், படப் பிரதிகளும் கடையில் பல லட்சம் ரூபா பெறுமதியான படப் பிரதிகளும், பலசரக்குக் கடையில் ஒரேயொரு சனலைட் சவர்க்காரம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருள்களும் அபகரிக்கப்பட்டுள்ளன.

வாகனம் ஒன்றில் வந்தோரே இந்தப் பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளார்களென வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-117)

## முகமாலையில் ஒருவர் களப்பலி

வவுனியா,செப்.10

முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் கப்டன் ஈழச்சுடர் (நியூட்டன் ஜெகன்-மன்னார்) என்பவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ம-164)

## குழந்தையை தத்தெடுக்க 26 பேர் 'போட்டி'!

தென்மராட்சி,செப்.10

மந்திகை ஆஸ்பத்திரியில் தாய் ஒருவரினால் கைவிட்டுச்சென்ற மூன்று மாதக குழந்தையை தத்தெடுக்க 26 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.

இதனால் குழந்தையைக் கையளிப்பதற்கு தகுதியான குடும்பத்தை தெரிவு செய்வதற்காக விண்ணப்பித்தோர் அனைவரும் கடந்த சனிக்கிழமை மந்திகை ஆஸ்பத்திரிக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணையில் பருத்தித்துறை மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர், வடமராட்சி பிரதேச பதிவுகாரர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க-117)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

வயலில் மேயவிட்ட மாடு
மிதிவெடிகள் இருக்கும்
பகுதிக்கு போய் விட்டது.
ஆயினும் அதைப் பிடிக்க
நீங்கள் அங்கு செல்வது
உங்களுக்கு மிக ஆபத்து!



# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
## நிறுவுநர் நினைவு சிறப்பு மலர் (10-09-2001)

## கல்விப் பணிப்பாளரின் செய்தி

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் நிறுவுநர் தின நாள் வெளிவருகின்ற சோமஸ்கந்தனின் வெளியீட்டிற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்சியடைகின்றேன்.

காலாகாலம் வெளிவருகின்ற இம் மலர் நிறுவுநரின் எண்ணங்களை வெளிக்கொணர்கின்ற செயற்பாடுகள் தொடர்பான ஏடாக வெளிவருகின்றமை இதன் சிறப்பம் சமாகும்.

நிறுவுநரின் நோக்கங்களின் அடிப்படையில் மாணவரின் தேவைகளை அறிந்து அவர்களை வழிப்படுத்தும் நிறுவன மான இக்கல்லூரி, கடந்த ஆண்டுகளிலும் பார்க்கத் தொடர்ந்து வரும் ஆண்டுகளின் கல்வியும், உண்டியும் வழங் கித் தன் பணி குறைவுறாது வளரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## ஆயிரக்கணக்கான மாணவரின் விடிவெள்ளி

தானங்களில் சிறந்தது அன்னதானம், வித்தியாதானம். அந்தவகையில் மழவராயர் கந்தையா அவர்கள் அன்ன தானத்திற்காக அன்னசத்திரத்தையும், வித்தியாதானத்திற் காக சோமஸ்கந்தப்பெருமான் கோயில்கொண்டிருக்கும் யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியையும் மக்களின் ஆன்ம ஈடேற் றத்திற்காகச் சிவன் ஆலயத்தையும் அமைத்து அவற்றின் பராமரிப்பிற்கெனச் சொத்துக்களையும் எழுதிவைத்த வள் ளண்மையை நினைக்கும்போது அன்னாரின் பரந்த சிந்தனை பொது நலனிற்காக அவரை அர்ப்பணிக்க வைத்த அவரது தெய்வீக சக்தி எம்மையெல்லாம் பூரிக்கவைக்கின்றது. எதிர்காலத்தில சமூக ஒளிகளாகத் திகழவேண்டியவர்களுக்கு இவை முன்மாதிரியாக அமைந்திருக்கின்றன. அவரது அர்ப் பணிப்பு இன்று ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு விடி வெள்ளியாக அமைந்துள்ளது. அப்படியான ஒரு பாடசாலை இவ்விடததில் அமைக்கப்பட்டிருக்கவில்லையானால் எத்தனை மாணவர்கள் கல்விகற்கும் வாய்ப்பை இழக்கவேண்டி நேரிட் டிருக்கும் என எண்ணுகின்றேன். அன்னாரின் சீரிய பணியால் வருடாந்தம் பல மாணவர்கள் இந்தப் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வருகைதருகின்றார்கள். சிறந்த வொரு கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் சிரத்தையோடு பணியாற்றி வருவது எமக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

மேன்மேலும் இப்பாடசாலை ஓங்கி வளர வாழ்த்துகின் றேன்.

பேராசிரியர் க.சின்னத்தம்பி
கல்வியியற்றுறைப் பீடாதிபதி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மாணவர்களின் வாழ்த்து

ஏழை மக்களது நன்மைக்காக அரும்பாடுபட்டு எமது கிராமத்தில் தனிமனிதனாக நின்று அளப்பரிய சேவையினை மனித சமுதாயத்திற்கு ஆற்றி வரலாற்றிலே புகழிடம் பெறு கின்ற மழவராயர் கந்தையா அவர்களது ஜனனதினமாகிய இந்நாளிலே 2001 - 2002 கல்வியாண்டிற்குரிய அனுமதியினைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களாகிய நாங்கள்,

வள்ளலார் அவர்கள் செய்த செயற்கரிய நற்பணிகளினை நன்றியுடன் நினைவுகூர்ந்து வாழ்த்துவதுடன்,

*"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது"*

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய எம்மைப் பல்வேறு வழிகளிலும் அறிவுள்ளவர்களாக உயர்வடையச் செய்த பாட சாலை அதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் மிக்க மகிழ்வுடன் வாயார, மனதார வாழ்த்துவதுடன் மேலும் எமது கல்லூரியானது சிறந்த கல்வி போதிக்கும் அறிவுச் சோலையாக மிளிர்ந்து புகழ்பரப்ப வேண்டுமென இவ்வினிய நன்னாளிலே மீண்டும் சிரம்தாழ்த்தி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
கு.வித்தியா, ம.ஜெயந்தன், கு.துஷ்யந்தன்,
கு.ரோகினி, க.செந்தமிழரசி, தி.டோசி,
இ.ரதிதேவி, செ.சுவிதா, மு.திலீபன்.



## சிவாசாரியார் ஆசியுரை

ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும் இவ்வேளையில் இக்கல்லூரி மேலும் சிறப்பாக வளர்ச்சியுற்று மாணவர்களின் கல்வி மேன் மேலும் சிறப்புற்று விளங்க எல்லாம்வல்ல சோமஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

சாமி சோமசுந்தரக் குருக்கள்
பிரதம சிவாசாரியார்,
அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி சமேத
விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்
(சிவன்கோயில்), புத்தூர்.

[illegible]

### யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
### நிறுவியவர் நினைவு தினமும்
### பரிசளிப்பு விழாவும்

காலம் : இன்று (10-09-2001) திங்கட்கிழமை பகல் 12.30 மணி
தலைவர் : திரு.வ. ஆறுமுகம் (அதிபர்) அவர்கள்
ஆசியுரை: சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள் (பிரதம குரு, புத்தூர் சிவன் தேவஸ்தானம்)
பிரதமவிருந்தினர்: திருமதி செ.மகாலிங்கம் (கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)
சிறப்புவிருந்தினர்: திரு.நா.வரதராஜன் (திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்.)
திரு.இ.சிவஞானசுந்தரம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கோப்பாய் பிரிவு)
திரு.பூ.குணசிங்கம் J.P.U.M. (தலைவர், வலி.கிழக்கு பிரதேச சபை)
திரு.பூ.எஸ்.ஏ.ரவி ([illegible])
நினைவுப் பேருரை: கலாநிதி ப.புஸ்பரட்ணம் (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பரிசில் வழங்கல் : பிரதம விருந்தினர் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புத்தூர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.ச., ப.மா.ச.

## அறிவுப்பசி தீர்க்க...

யாழ்/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவியவர் தினமும், பரிசளிப்பு விழாவும் 10.09.2001 அன்று கொண்டாடப்படும் போது எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ் வடைகின்றேன்.

சைவமும் தமிழும் ஒருங்கே வளரத் தம்மை அர்ப்பணம் செய்தோரில் மழவராயர் கந்தையா குறிப்பிடத்தக்க ஒரு வராவார். யாழ். குடாநாட்டிலே பல்வேறு அமைப்புக்கள் பாடசாலைகளை அமைத்தன. அதனிலும் மேலாக சேர் பொன் இராமநாதன், மழவராயர் கந்தையா போன்றோர் தமது சொத்தைக்கொண்டே பாடசாலைகளை அமைத்த னர். அதிலும் மக்களின் உளப்பிணி தீர்க்க ஆலயத்தையும், வயிற்றுப்பசி தீர்க்க அன்ன சத்திரத்தையும், அறிவுப்பசி தீர்க்க யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியையும் அமைத்திருப் பது வள்ளல்களில் அவரின் உயர்ந்த தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இன்று 1800 மாணவர்கள் அறிவுப் பசியைத் தீர்க்க சோமஸ்கந்தாவை நாடி வந்திருப்பது அன்னாரின் ஆத்மாவைச் சாந்தியடையச் செய்யும். தொடர்ந்தும் இப் பாடசாலை சைவ மரபையும், தமிழ் மரபையும் பேணிக் காத்து தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவிவருகின்றது. அன்னாரின் எண்ணம் மேன்மேலும் பொலிவுடன் நிறைவுற வாழ்த்துகின்றேன்.

து.வைத்திலிங்கம்
யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

## வள்ளலாரின் நற்பணி

*"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீர துடைத்து"*
என்பது வள்ளுவர் வாக்காகும்.

இந்த உன்னதமான கருத்திற்கு அமைவாக எதிர்ப் பயனை எதிர்பாராது, சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்குத் தனது செல்வங்கள் யாவையும் வாரி வழங்கியதால் எமது ஸ்தாபகர் வள்ளலார் மழவராயர் கந்தையா அவர்கள், அம மக்கள் மனதிலே என்றென்றும் நிலையான இடத்தினைப் பெற்றுள்ளார்கள். ஆன்ம ஈடேற்றத்திற்காகச் சிவன் கோயிலை யும், அறிவுப் பசி நீக்க எங்கள் கல்லூரியையும் நிறுவிய வள்ளலார், புத்தூர்ப் பதியினிலே அன்னசத்திரம் ஒன்றையும் அமைத்தார்கள். இந்நிறுவனங்கள் மக்களுக்குத் தொடர்ந் தும் சேவை செய்யவேண்டுமென்ற உயரிய நோக்கிலே அறக்கட்டளைகளையும் அமைத்தார்கள். வள்ளலாரின் மேலான அபிலாசைக்கு அமைவாக அவர்களின் அறக்கட்டளை உதவிகொண்டு, கல்லூரியில் எழுந்தருளியுள்ள சோமஸ்கந் தருக்கு நித்திய பூசை, நாயன்மார்களின் குருபூசைகள், அத்திவார தினம், வித்தியாரம்ப தினம், நலிவுற்ற சிறார்க ளுக்கு சிற்றுண்டி வழங்கி மாலைநேர பின்னூட்டல் வகுப்புக் கள், மாணவரின் ஆன்மீக ஈடேற்றத்திற்காக மாவட்ட மட்டத் திலே திருக்குறள் மனனப்போட்டி மற்றும் கல்லூரி பௌதிக வள அபிவிருத்தி போன்ற நற்பணிகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றிற்கு மேலாக, எமது கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களில் இதற்கென நிய மிக்கப்பெற்ற சபையினால் தெரிவுசெய்யப்படும் மூவருக்கு வருடம் 3000 ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்களை அவர்களின் மேற்படிப்பு நிறைவுபெறும்வரை வழங்கும் திட்ட மும் இவ்வருடத்திலிருந்து ஆரம்பமாகிறது என்பதைத் தெரி விப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

ஸ்தாபகரின் கனவினை நினைவாக்கும் வகையிலே, எமது கல்லூரியில் பயின்ற மாணவர்கள் பலர், கல்விமான் களாகவும், மனித விழுமியங்கள் நிரம்பிய நற் பிரசைகளாக வும், சமூகத் தொண்டர்களாகவும், பல்வேறு துறைகளிலும் உயர் பதவி வகிப்பவர்களாகவும் திகழ்கிறார்கள். வள்ளலா ரின் நற்பணிகளால் பயன்பெற்ற இக் கல்லூரிச் சமூகத்தினர், அவர்களின் ஜனன தினமாகிய புரட்டாதித்திங்கள் பத்தாம் நாளினை செய்ந்நன்றி உணர்வுடன் நினைவுகூர்ந்து விழா வாக்க் கொண்டாடுகிறார்கள்.

*வாழ்க வள்ளலார் புகழ்!*
*வளர்க ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி!!*

வ.ஆறுமுகம்
புத்தூர்.

(C/18188)

கணேசன் ரெக்ஸ்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

CITY TAILORS
Specialist in Wedding Coats & Suits
73, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

ரட்ணம்ஸ் பாட்டா
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கன் நகை மாடம் அன்ட் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ரவி & ராஜ் சில்க்ஸ்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

றெக்ஸ் ரெயிலேர்ஸ்
51, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெயானந்தம் பாதணித் திருத்தகம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். வாச் வேக்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரா நகை மாடம்
T.P: 2804
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

EVEREST WATCH WORKS
எவரெஸ்ற் வோச் வேக்ஸ்
65, Kasthuriar Road,
Jaffna.

விஷ்ணு பவான் சைவ உணவகம்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# நிப்பொன் (NIPPON) மின்விசிறிகள்

**Nippon Fan Quality Product**

- Box Fans
- Wall Fans
- Orbit Fans
- Table Fans
- Stand Fans
- Ceiling Fans
- Exhaust Fans
- Air Cooling Fans etc.....

ஒரு வருட உத்தரவாதம்

(C-18192)

மிகச் சிறந்த தெரிவுகள், 30 வகைகள், 26 நிறங்கள்

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc.Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

## நல்லூர் மக்கள் சனசமூக நிலையம்



எமது நிலையப் புனரமைப்புக்காக ரூபா 250,000 நிதியை ஒதுக்கீடு செய்து அதில் 125,000 ரூபாவை முதற்கட்டமாகத் தந்துதவியமைக்காக,

மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.
**கே.வி.குகேந்திரன்** *(ஜெகன்)*
அவர்களையும்



எமக்கு இந்நிதியைப் பெற்றுத்தர முன்னின்று உழைத்தவரான
நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.
**க.மணிபல்லவராஜன்** *(நிஷாந்தன்)*
அவர்களையும்
நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(92073) நல்லூர் மக்கள் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்



குரும்பசிட்டி

**திருமதி விக்கினேஸ்வரி கனகசுந்தரம்**

தோற்றம் 1946-02-22 | திதி:-10-09-2001 | மறைவு 1994-08-29

ஏழாம் ஆண்டில் எம் இதயத்தை
விட்டகலா எண்ணச் சுமைகளுடன்
நின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பேரப்பிள்ளைகள்.

61,மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (92083)

## சத்யசாயி சேவா நிலையத்தில் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,செப்.10

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அகில உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு எதிர்வரும 16ஆம் திகதி யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

காலை 9 மணிக்கு இடம்பெறும் இரத்ததான நிகழ்வில் அனைத்து சத்ய சேவா நிலையங்களைச் சேர்ந்த பலர் இரத்ததானம் வழங்கவுள்ளனர்.

(க-15)

## மீன்சந்தை வளவில் கொல்களம் அமைப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.10

பருத்தித்துறை மீன்சந்தை வளவுக்குள் கொல்களம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை நகர சபையால் அமைக்கப்பட்டு வரும் இக்கட்டட வேலைகள் தற்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

(ம-182)

## பரிசளிப்பு விழா

கோப்பாய்,செப்.10

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பகல் 12.30 மணிக்கு அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆசியுரையை புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள் வழங்குவார். பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், உப தலைவர் பூ.எல்.ஏ. ரவி ஆகியோரும் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ப. புஸ்பரட்ணம் நிகழ்த்துவார்.

(ம-72)

## சைக்கிளோட்ட வீரர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.10

மக்கள் வங்கியின் 40வருட சேவையை முன்னிட்டு நடத்தப்பட்ட 45மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முன்னணியில் வந்துகொண்டிருந்த இருவரின் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிள் சவாரியின் இறுதிக் கட்டத்தில் - முடிவடையும் இடத்தில் இருந்து சுமார் 100யார் முன்பாக - இடம்பெற்ற இந்த விபத்தினால் இருவரும் பரிசுபெறும் வாய்ப்பினையும் இழந்தனர்.

இச்சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரவியம் இந்திரஜித் (வயது 34) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-15)


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
விரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459


# வவுனியாவில் இளைஞர் கைது

வவுனியா,செப்.10

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுத் துறையினர், வவுனியா ஆசிக்குளம் பகுதியில் வசித்த இளைஞர் ஒருவரைக் கைது செய்து கொண்டுசென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிரிதரன் (கிரி) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

இவரின் வீட்டில் வசித்து வந்த மற்றுமொரு இளைஞர் கடந்த ஜூலை மாதம் விசேட புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-4-164)

உ
குகமயம்

## இமையாணன் உடுப்பிட்டி

## அருள்மிகு ஸ்ரீ முருகன் திருக்கோயில் பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக விழா

இன்று (10-09 -2001) திங்கட்கிழமை காலை 6.04மணி முதல் 6.32மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். அனைவரும் வருக; திருவருள் பெறுக!

கும்பாபிஷேக பிரதம குரு:
சங்கீதசாகரன்
**பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவ சிவாச்சாரியார்**
*யாழ். கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் கோயில் பிரதமகுரு*

பஞ்ச குண்டயாகாதிப குருமார்
பிரம்மஸ்ரீ கி.வைத்தீஸ்வரக்குருக்கள/*யாழ்.*
பிரம்மஸ்ரீ கி.நாராயணக்குருக்கள்/*யாழ்.*
பிரம்மஸ்ரீ செ.ரவிச்சந்திரக்குருக்கள்/*அளவெட்டி*
பிரம்மஸ்ரீ கு.சரவணபவக்குருக்கள்/*இணுவில்*

*சாதகாச்சாரியார்*
பிரம்மஸ்ரீ
ம.தாணுநாதக்குருக்கள்
*இணுவில்.*
பிரம்மஸ்ரீ நா.திவாகரசர்மா
*உரும்பிராய்.*

ஸ்ரீ முருகன் அருள்வழி நடக்கும்
பரிபாலன சபை. (91914)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்

கோப்பாய் உதவி அரசாங்க பிரிவினால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து பல வருடங்களாக முதலாமிடத்தையும், வலி. கிழக்கு பிரதேச சபையினால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து முதலாமிடத்தையும் பெற்றதோடு 2001இலும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட வீர வீராங்கனைகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு-


- எமது கழக வீரர் **த.துஷ்யன்**
  வீராங்கனையான **த.மோகனப்பிரியா**

ஆகியோர் பாடசாலை மட்டத்திலான தடகள விளையாட்டுப் போட்டியில் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணாக்கர்) மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் வெற்றி பெற்று தேசிய ரீதியிலும் பங்குபற்றுவதற்குத் தெரிவாகியதையும் **த.துஷ்யன்** யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப்போட்டியில் 10000m, 5000m, 1500m ஓட்டப் போட்டி ஆகியவற்றில் முதலாமிடத்தையும் யாழ். மக்கள் வங்கியினால் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றமையையிட்டு நாம் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

-நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும்,
பொதுமக்களும்.

நீர்வேலி. (92101)

# நன்றிகள்.....!!



எங்களுக்காக மலர்ந்தது 01 - 07 - 1938

விழிநீர்சொரிய வீழ்ந்தது 11 - 08 - 2001

எட்டுத் திசை ஆண்ட
மன்னர் இவர்தானோ.....?

## அமரர் பொ.சங்கரப்பிள்ளை J.P.

(முன்னாள் அதிபர்,யா/உடுத்துறை மகாவித்தியாலயம்;
வடமராட்சி கிழக்கின் சிரேஷ்ட சமூக சேவையாளர்)

வடமராட்சிக் கிழக்கின்
வரலாற்றுப் பொன்மகனே...!!
புன்னகையால் உலகாண்ட
எங்கள் மன்னவரே...!
கல்வித் திருவேள்வியால்
- எம்மண்ணின்
கறை கழுவி,
எண்ணற்ற விருட்சங்களை
எழுந்துயரச் செய்தவரே...!!
ஐயா...!!
தேர்டரி வித்ந்தீர்களா...??
தெய்வத் திருமகனே...!
மரதமொன்று ஆகிடினும்
ஓய்வில்லை விழிகளின்னும்...

எங்கள் பெருந்துயரில் பங்கேற்று விழிநீர் துடைத்து விட்ட அனைத்துக் கரங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்...!!

"ஆச்சி துணை"
*(சம்பந்தர் கடை அருகில்)*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

சிரேஷ்ட மகன்
சங்கரப்பிள்ளை புஷ்பகுமார். (C/18139)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கில வகுப்புகள்

மீண்டும் ஆரம்பம் ஆங்கில இலக்கியம் Year 10 &11, ஆங்கில பாஷை (all Grades). இலக்கண வகுப்புகள், பொது ஆங்கிலம் A/L. அனுபவமுள்ள லண்டன் பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (91985)

## இசைக் கருவிகள் விற்பனைக்கு

YAMAHA PSR 36 - YAMAHA PSS 460 ஜப்பான் ஸ்ரீரியோ ORGANகள் (வேறு மொடல்களுக்கு மாற்றவும் முடியும்), தபேலா செற், எலெக்ரிக் கிற்றார் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திங்கள், புதன், வியாழன் மாலை நேரங்களில். "கணதிரு" உடுவில் றோட், மருதனார்மடம். (91954)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இரு கதவுகள் கொண்ட நஷனல் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.மகேஸ்வரன், கயிலயம்பதி, வராய்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (92122)

நல்ல நிலையிலுள்ள CD 90 (பென்லி பற்றி மொடல்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.அப்பையா, நாகலிங்கம் வீதி, கொக்குவில்மேற்கு. (92105)

ஆலய பாவனைக்கு உகந்த இந்தியத் தயாரிப்பான நீள கோண்கள புதியன, நடுத்தரமான நீள கோணகள், கடைப்பாவனைக்கு ஏற்ற கண்ணாடி அலுமாரி என்பன விற்பனைக்கு உண்டு. கோண் சோடியின் விலை ரூபா 9000/-. தொடர்பு: ம.மயூரன், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (92059)

## தவறிவிட்டது

மாதகல் கிழக்கு, மாதகலைச் சேர்ந்த இராசரத்தினம் இந்திராணி என்பவருடைய தே.அ.அட்டை (இல. 566641963V) பேர்ஸுடன் 03.09.2001 அன்று சந்திதிக்கும் கெருடாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (92116)

பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவரஞ்சன் என்பவரது தே. அ.அட்டை (இல.791474035V) 26.08.2001 அன்று உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானத்திற்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (92118)

பளையைச் சேர்ந்த தங்கராசா தயாமோகன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.801203302V), விசேட அ.அட்டை (இல.091503844) என்பன வல்வெட்டித்துறைக்கும் உடுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடுப்பிட்டி சுமன் வீடியோ சென்ரரில் அல்லது அ.அட்டை முகவரியில் ஒப்படைத்துதவவும். (92113)

## முட்டை விற்பனைக்கு

எங்களிடம் கோழிமுட்டை, இறால் கருவாடு, நெத்தலிக் கருவாடு, மாசிக் கருவாடு, சிரட்டைக்கரி நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம். மல்லிகா, 149, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் அருகாக) யாழ்ப்பாணம். (92086)

## வீடற்றவன்

சி.வி.வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் - அராலியூர் நகுந்தரம்பிள்ளை எழுதியது. 10ஆம், 11ஆம் தரங்களில் விருப்பப் பாடமான தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள் ரூபா 25.00. (92132)

## ஆங்கில வகுப்புகள்

A/L பரீட்சை எழுதியவர்களுக்கு SPOKEN ENGLISH WITH GRAMMAR. ஆரம்பம்: வாரநாள்: காலை 8.30 - 14.09.2001. வார இறுதிநாள்: மாலை 4.30 - 15.09.2001. ENGLISH ACADEMY, King's Avenue, Katpaha Pillaiyar Temple View, Urumpirai. By: Mr&Mrs. M.P. Shan. (92131)

---

**BRIGHTMAN**

கல்வி நிலையம்
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

By:- **BRITTO**

ஆரம்பம்:-11. 09, 2001 செவ்வாய் 2.00p.m

(92129)

---

**N.C.A.**

கல்வி நிறுவனம்
பருத்தித்துறை

**DAY CLASS**

கலை, வர்த்தகம்
வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:- 12.09.2001

(92103)

---

உடுப்பிட்டி வல்லை வீதியில்

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் ஆவணி 25ஆம் நாள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை காலை 6.26 – 8.22 மணிக்குள் வரும் கன்னி லக்கின சுபவேளையில்

**செல்வா கணனி பதிப்பகம்**

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவிருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் விழாவைச் சிறப்பிக்க வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வெட்டித்துறை வீதி,
நாவலடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

அன்புடன்:
- திரு.க.செல்வச்சந்திரன்

(92133)

---

உ

## திருமண வாழ்த்து

இன்று (10.09.2001) திங்கட்கிழமை
இல்லற வாழ்வில் இணையும் புதுமணத் தம்பதிகள்
**ஸ்ரீகாந்தன் (ஸ்ரீ) - றோஜினி (றோஜி)**
ஆகிய இருவரையும்

எல்லாம் வல்ல அச்சுவேலி, பத்தமேனி தீர்த்தாங்குள விநாயகரதும், இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளினதும், வதிரி காளையந்தோட்டம் முத்துக்குமாரசுவாமியினதும் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்கப்பெற்று, ***ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க*** என மனமார மகிழ்ந்து **வாழ்த்துகின்றோம்!**

வாழ்த்துவோர்:
வதிரி,
கரவெட்டி.
- சிவஸ்ரீ பா.சோமசுந்தரக்குருக்கள் குடும்பத்தினர்.

(92135)

---

## புதிய சயன்ஸ் அக்கடமி

நெல்லியடி

A/L 2002 **DAY CLASS**

(உயிரியல், கணிதம்)

| | |
|---|---|
| இரசாயனம் | - திரு.மணியம் |
| பௌதிகம் | - திரு.குகன் |
| இணைந்த கணிதம் | - திரு.செந்தில்றாஜ் |
| உயிரியல் | - திரு.கெங்காதரன் |
| | - திரு.தற்பரன் |

**கலை, வர்த்தகப் பிரிவு**
(வழமையான ஆசிரியர்கள்)

**SPOKEN ENGLISH**
பிரிவு I *ஆரம்பம்: 12-09-2001*

(92102)

---

உ

**தும்பளை - இலட்சுமணன் தோட்டம்**
**அருள்மிகு வீரமாகாளி - வடபத்திரகாளி அம்மன்**

**5228ஆம் ஜயந்தி தினவிழா விஞ்ஞாபனம் 10.09.2001**

அன்பர்களே!

இன்று (10.09.2001) திங்கட்கிழமை மேற்படி தேவஸ்தானத்தின் 5228ஆம் ஜயந்தி தினம் பக்திப்பரவசத்துடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

நிகழ்ச்சிகள்:

**மங்கள இசை:** இரவு 7 மணிமுதல் 9 மணிவரை ஜெகநாதன் குழுவினர்
**அருளாசியுரை:** 9 மணிக்கு – **சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராசாக் குருக்கள்** B.A.
(ஆசிரியர், ஆலய பிரதமகுருவும் அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியப் பொருளாளரும்)
**பட்டி மண்டபம்:** 9.15மணிக்கு **கிருஷ்ண அவதார நோக்கம்**
கம்ச சங்காரமா? பாரத யுத்தமா?
**ஸ்ரீ பத்திரகாளி ஜயந்தி** – இரவு 12 மணிமுதல் அதிகாலை 2 மணிவரை
*விசேட பூசை – வீதியுலா – பிரசாதம் வழங்கல்.*
**வில்லிசை** – 2 மணிமுதல் 5 மணிவரை
கலாவிநோதன் வில்லிசை மன்னன்
**நா.கணபதிப்பிள்ளை - சின்னமணி குழுவினர்**
**அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக!!**

உபயகாரர்:
*திரு.சி.வாமதேவன் (செயலாளர்) திரு.பொ.இராசதுரை (தலைவர்)*
*தும்பளை – நெல்லண்டை பத்திரகாளி அம்மன் வழிபடுவோர் சங்கம்.*
**சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜக்குருக்கள்,**
(92112) " **சிவஸ்ரீ தியாக.அமிர்தகமசக் குருக்கள்.**

---

**வட்டுக்கோட்டை இலக்கைப் பளச்சி**
**பத்திரகாளி அம்பாள் சமேத**
**வீரபத்திர சுவாமி திருக்கோயில்**
**கும்பாபிஷேக மண்டல பூர்த்தி தின**
**நவோத்தர சங்காபிஷேகப் பெருவிழா**

அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணி மாதம் இன்று (10.09.2001) திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வீரபத்திர சுவாமிக்கு சங்காபிஷேகம், விஷேட பூஜை நடைபெற்று நண்பகல் மாகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, எம்பெருமானும் எம்பிராட்டியும் பூந்தண்டிகையில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். இரவு 8 மணிக்கு இராகம்ஸ் இசைக் குழுவினர் நடத்தும் "**இன்னிசை கானமழை**" இடம்பெறும்.

**தேவஸ்தான குரு:**
**பிரம்மஸ்ரீ சோ.லஷ்சுமி நாரரயண சர்மா**
சிவன்கோயிலடி சித்தன்கேணி.

**பிரம்மஸ்ரீ மு.பாஸ்கர ரவிக்குருக்கள்**
(விசவர்த்தனை முருகமூர்த்தி கோவில் தேவஸ்தானம், பண்ணாகம்.)

பரிபாலன சபை
**மு.சிவபாலன் (பேபி)**
தலைவர்.

(92119)

---



## நாடக விழா

இன்று (10.09.2001) திங்கட்கிழமை
இரவு 7 மணிக்கு
**கரணவாய் மேற்கு சோழங்கன்பதி**
**மதுரை மீனாட்சி அம்மன்**
வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு
உடுப்பிட்டி ஜெகநாதன் குழுவினரின் மங்கள வாத்திய தவிற் கச்சேரியுடன்
அரியாலையூர் நடிக கலாமணி **V.செல்வம்** சாவித்திரியாகவும்
கொடிகாமம் **A.V.M.** புகைப்படக் கலைஞரும்
உடுப்பிட்டி கலைவாணி வில்லிசைக்குழு வில்லிசைப்பாளருமான
**A.V.மூர்த்தி** சத்தியவானாகவும்
இணைந்து வழங்கும்

"சத்தியவான் சாவித்திரி"

புராண இசை நாடகம் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ச.இராகுலன்,
10ஆம் திருவிழா உபயகாரர்.

(92130)

---

உ

**கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம்**
**அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர தேவஸ்தான**
புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண நூதன
விநாயக, சுப்பிரமணிய, வைரவ பரிவார நவக்கிரக மூர்த்திகள்
**மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

அடியார்களே!

இன்று (10-09-2001) திங்கட்கிழமை அதிகாலை 5.03 மணிமுதல் 7.05 மணிவரையில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில், மகா கும்பாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் யாவும் 06-09-2001 வியாழன்முதல் நடைபெற்றுவருகின்றன.

கும்பாபிஷேகப் பிரதம பிரதிஷ்டா குரு:
சிவாகம தர்ம உபதேச வாசஸ்பதி அருட்பிரகாசசீலர்
சைவசித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள்** B.A.
(ஆசிரியர்-ஹாட்லிக் கல்லூரி, சமயதீட்சைப் பணிப்பாளர், வீரமாகாளி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு, அனைத்துலக சைவக் குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியப் பொருளாளர்)

| | |
|---|---|
| சர்வபோதகம் | :பிரம்மஸ்ரீ சுசுரேஸ்வரக்குருக்கள் |
| சர்வசாதகம் | :சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள் |
| அருளாசியுரை | :சிவப்பிரம்மஸ்ரீ இ.சதாசிவசர்மா (சமஸ்கிருதப் பண்டிதர்) |
| வாழ்த்துரை | :சிவஸ்ரீ ஸ்கந்த.சோமசுந்தரக் குருக்கள் J.P. |
| | திரு. சி.கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி) |
| பிரதமகுரு | : சிவஸ்ரீ வை.சிவராசாக் குருக்கள் |

**அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!**

- ஆலய பரிபாலன சபை -
உபயகாரர்கள்.

(92111)

---

உங்கள் கலை நிகழ்ச்சிகள், திருமணங்கள் மற்றும் கூட்டங்கள் நடத்த வேண்டுமா?
**இதோ தயார் நிலையில் ....!**

மானிப்பாய்
வலி.தென்மேற்கு பிரதேச சபை
தலைமை அலுவலகத்தின்
கலாசாரமண்டபம்

**கட்டணம் : ரூபா நாலாயிரம் மட்டுமே.**
உடன் தொடர்பு கொள்க.

*செயலாளர், தலைவர்,*
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,*
*மானிப்பாய்.*

(C/18161)

## மோ. சைக்கிளில் சென்றவர் தவறிவீழ்ந்துகாயம்

யாழ்ப்பாணம், செப். 10

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்தவர் கை முறிந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் வேலணைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த எஸ். தர்மசீலன் என்பவரே கையில் காயமடைந்தவராவார். (ஐ–ரி)

# ரயில்வே சேவைகள் சங்கங்கள் இருநாள் வேலைநிறுத்தப் போர்

ரயில்வே சேவைகள் சங்கங்களின் கூட்டமைப்பு நாளையும் நாளை மறுதினமும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது கூட்டமைப்பு ஏற்கனவே முன்வைத்த 15 அம்சக் கோரிக்கைகளுக்கு இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் —

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாகவும் —

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே. வி. பியும் இணைந்து அமைத்துள்ள தகுதிகாண் அரசு எதிர்நோக்கும் முதலாவது போராட்டம் இது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-3)

## உழவு இயந்திரங்கள் பதிவு

யாழ். மாவட்ட உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, மணற்காட்டில் இருந்து மணல் ஏற்றும் உழவு இயந்திரங்களின் சகல ஆவணங்களும் மீளாய்வு செய்யப்பட உள்ளதால் அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களும் தமது வாகனம் தொடர்பான ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்து இப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இன்றும் நாளையும் காலை 10 மணி முதல் பி. ப. ஒரு மணி வரை சங்க மண்டபத்தில் இப்பணிகள் நடைபெறும் என்றும்—

இவ்விரு தினங்களுக்குள் மீளாய்வுக்கு சமுகமளிக்காதோரின் உழவு இயந்திரத்திற்கான பதிவுகள் இரத்துச் செய்யப்படும் என்றும்—

யாழ். மாவட்ட உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-ரி)

## முதியோர் வார நிகழ்வுகள் ஊர்காவற்றுறையில் ஏற்பாடு

ஊர்காவற்றுறை, செப். 10

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள முதியோர் வாரத்தை பொட்டி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய கடந்த வியாழக்கிழமை அனலைதீவில் "முதியோர்கள் இந்நாட்டின் சொத்தாவார்" என்ற தொனிப்பொருளில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் ந. கிருபாகரனால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அத்துடன் மேற்படி முதியோர் தினத்தையொட்டி, பாடசாலை மாணவிகள் மத்தியில் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (க-16)

## சட்டமா அதிபர் திணைக்களம் ஓரவஞ்சனை நடவடிக்கை

### மேல் மாகாணசபை குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

கைதுசெய்யப்பட்டு, நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் பாரபட்சம் காட்டி வருவதாக மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மேல் மாகாண சபைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பாவித் தமிழ்ப்பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும், கொடூர கொலைகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் குற்றஞ் சாட்டப்பட்ட படையினர் பிணையில் விடுவிக்கப்படுவதாகவும் —

ஆனால் குற்றச்சாட்டுகள் இன்றி, விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக பெருமளவு அப்பாவித் தமிழர்கள் சிறைகளில் வாடுவதாகவும் —

மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

படையினரை பிணையில் உடனுக்குடன் விடுவிக்க ஆவன செய்யும் சட்டமா அதிபர் திணைக்களம், தமிழ்க் கைதிகள் குறித்து மட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்காமலிருப்பது ஏன்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ-4)

# மோ. சைக்கிள் வாங்கும்போது உரிய ஆவணங்களையும் பெறுக!

### பதிவுசெய்வதற்கு அவை அவசியம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 10

குடாநாட்டில் புதிதாக மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்யும்போது உரிய ஆவணங்களையும் அத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

புதிதாகக் கொள்வனவு செய்யும் மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்வதற்கு கொள்வனவு செய்யும் வர்த்தகரிடம் இருந்து பெறப்படும் ஆவணங்கள் அவசியமாகும் என்றும்—

உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத வாகனங்களைப் பதிவு செய்ய முடியாது என்றும் —

அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்குப் போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த அறிவிப்பை விடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும்—

அந்தத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

## பிணை எடுக்க எவருமின்றி சிப்பாய் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 10

மண்டைதீவில் இளம் பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கடற்படைச் சிப்பாயை பிணை எடுக்க எவரும் வராததால் அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பத்தேகமவைச் சேர்ந்த நிமால் பிரியந்த என்ற இந்தச் சிப்பாயை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதிவான் அனுமதியளித்திருந்தார்.

ஆனால் சிப்பாயை பிணை எடுக்க எவரும் வராததால் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஒ)

# ரெலிகொம் பங்குகளை விற்பதை ஜே.வி.பி. இனி அனுமதிக்காது!

### அரசுக்குப் புதிய சிக்கல்

கொழும்பு, செப். 10

தனியார் மயப்படுத்தலை மேலும் விரிவுபடுத்துவதற்காக ரெலிகொம் நிறுவனத்தின் மேலும் ஒருதொகுதி பங்குகளை விற்பனை செய்வது என்று அரசு எடுத்துள்ள முடிவு சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரெலிகொம் நிறுவனத்தை மேலும் தனியார் மயமாக்குவதைத் தாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று ஜே. வி. பி. திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. ஆனால் ரெலிகொம் பங்குகளை விற்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாக தொலைத் தொடர்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

'ரெலிகொம்' நிறுவனத்தின் 49 சதவீத பங்குகள் ஏற்கனவே ஜப்பானின் என்.ரீ.ரீ நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. ஏனைய பங்குகள் அரச நிறுவனங்கள் சீர்திருத்த ஆணைக்குழுவின் மூலம் கேள்வி முறையில் விற்கப்படவுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி 'ரெலிகொம்' நிறுவனத்தின் எஞ்சிய பங்குகளை விற்பனை செய்வதை தனது கட்சி அனுமதிக்காது என்று ஜே வி பி. பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## நச்சுத்திரவ கொள்கலன்களில் உணவு பொதி செய்யக்கூடாது

### வவுனியா அரச அதிபர் உத்தரவு

வவுனியா, செப். 10

இரசாயனத் திரவங்கள், கிருமிநாசினிகள் பொதி செய்யப்படும் பரல்களையோ, கான்களையோ உணவுப் பொருள்கள் பொதி செய்யப் பயன்படுத்தக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவை வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் விடுத்துள்ளார்.

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு அனுப்பப்பட்ட தகரங்களில் பொதி செய்யப்பட்ட பொருள்களில் இரசாயனத் திரவ வாடை வீசியதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும்—

அதைத் தொடர்ந்தே அரச அதிபர் இந்த உத்தரவை விடுத்துள்ளதாகவும்—

செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## மஹிபால ஹேரத்துக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா?

கொழும்பு, செப். 10

இவ்வாரம் ஜனாதிபதி அமைக்கப்போகும் 20 உறுப்பினர் கொண்ட புதிய அமைச்சரவையில் மஹிபால ஹேரத்தை சேர்க்காமல் விடுவாராயின் மஹிபால ஹேரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிடத் தயார் என்று ஐ. தே. க. தெரிவித்துள்ளது.

மாவனல்லையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்களில் மஹிபால ஹேரத்தின் ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதை அடுத்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஐ. தே. கட்சி திட்டமிட்டிருந்தது.

அமைச்சரவையில் இருந்து அவரை விலக்கிவிட ஜனாதிபதி முடிவு செய்தால அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்படலாம் என்று ஐ.தே.க. பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்திருக்கிறார்.

44 அமைச்சர்களில் 20 பேரை மட்டுமே புதிய அமைச்சரவையில் சேர்க்க முடியும் என்பதால் மஹிபால ஹேரத் அமைச்சரவையில் இடம்பெற வாய்ப்பில்லை என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## அனல் மின் உற்பத்தியை ஆரம்பிக்கும் கட்டாயம் அரசுக்கு

கொழும்பு. செப். 10

தென்னிலங்கையில் தற்சமயம் அமுலில் இருக்கும் மின்வெட்டு அடுத்த இருவார காலத்தில் நீக்கப்படும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்,

அடுத்த வாரங்களில் மழைபெய்தாலென்ன பெய்யாவிட்டாலென்ன மாற்று ஏற்பாட்டின் கீழ் மின்வெட்டு நீக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அனல் மின் உற்பத்தித் திட்டத்தைப் பலரும் எதிர்த்து வந்த போதும் அதை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்றும்—

நாட்டின் நலன் கருதி அந்த திட்டத்தை அமுல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும்—

அவர் கூறினார்.

கடல் நீரை குடிதண்ணீராக மாற்றும் திட்டம் ஒன்றை விரைவில் அமுல் செய்ய விருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## சுகாதார சீர்கேடு

நெல்லியடி,செப். 10

துன்னாலை அல்லையம்பதி பொதுச் சந்தைக் கட்டடத்தைச் சூழ புல்பூண்டுகளும், குப்பை கூளங்களும் காணப்படுகின்றன.

இதனால் அங்குள்ள வியாபாரிகளும், பாவனையாளர்களும் சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-109)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:–

★ பிற்பகல் 3.30 மணி — உதயதாரகை 'ஏ' அணி எதிர் திக்கம் இளைஞர் வி.க.அணி.

★ மாலை 4.30 மணி — கலைவாணி 'ஏ' அணி எதிர் யங்லயன்ஸ் 'ஏ' அணி.

(ஐ-3)

## கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம், செப். 10

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ். கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் கட்டடத்தைத் திறந்து வைப்பார். யாழ். மாநகரசபை உறுப்பினர் த. சுபத்திரன் பெயர்ப் பலகையைத் திறந்து வைப்பார். (ஐ-3)

# ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம்

பருத்தித்துறை,செப்.10

வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

வலயத்துக்கு உட்பட்ட இடமாற்றம், வெளிமாவட்ட இடமாற்றம், தேசியப் பாடசாலை இடமாற்றம் என்பன கோரி விண்ணப்பிப்பவர்கள் அவற்றுக்குரிய விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களினால் சிபார்சு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

மூன்று பிரதிகளைக்கொண்ட இந்த விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்திலிருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைச் செயலாளர் எஸ்.நாகேந்திரா அறிவித்துள்ளார்.

(க-7-118)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் கந்தசாமி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட அம்பலவாணர் கந்தசாமி நேற்று (09-09-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - பொன்னாச்சி ஆகியோரின் அன்பு மகனும், சின்னப்பு - பொன்னாச்சி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், தங்கராசா, ஞானலிங்கம், வீரசிங்கம், சற்குணராசா, இரத்தினசிகாமணி ஆகியோரின் தகப்பனாரும், பரஞ்சோதி, மங்களேஸ்வரி, சாந்தநாயகி, இராஜேஸ்வரி, ஸ்ரீவர்ணன் ஆகியோரின் மாமனாரும், மதிஜனா, பிரசாந்தன், அரவிந்தன், வைகுந்தன், அச்சுதன், யாழினி, தாமிரா, கிசோர்னிகா, துசானிகா, நிரோஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*கண்டி வீதி,*
*கொடிகாமம்.*

தற்காலிக முகவரி:
*7/2, றட்ணம் லேன்,*
*K.K.S. வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**க.ஞானலிங்கம்** (மகன்)
பதவிநிலை உதவியாளர்,
பிராந்தியக் கணக்கீட்டு அலுவலகம்,
தபாற்றிணைக்களம்.

(92137)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 - 06 - 1938



மறைவு 11 - 08 - 2001

### அமரர் சரவணமுத்து கனகலிங்கம்

**(செட்டியார்)**

**அன்போடும் பண்போடும் வாழ்ந்து நல்ல வழியில் நாம் வாழ எம்மை உருவாக்கிய எமது அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு நீங்காது. பசுமையாய் எம் நெஞ்சில் என்றும் பதிந்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக.**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகள்.

இன்று (10.09.2001) திங்கட்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
*ந.துரைராசா,*
*கேராளிவத்தை ஒழுங்கை,*
*நீர்வேலி வடக்கு.*

நிரந்தர முகவரி:
*ச.கனகலிங்கம்,*
*மட்டுவில் தெற்கு.*

(92136)

## வல்வை ஆஸ்பத்திரிக்கு குழாய் மூலம் தண்ணீர் விநியோகம்

நெல்லியடி,செப்.10

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆதரவில் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனைக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள தெணி என்ற இடத்திலிருந்தே, சுமார் 2 லட்சம் ரூபா செலவில் இந்த நீர் விநியோகத்திற்குரிய வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (க-109)

## மானிப்பாய்ச் சந்தை புதிய இடத்தில்!

வலி.தென்மேற்கு,செப்.10

மானிப்பாய் - இறவுக்கைச் சந்தை விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இறவுக்கைச் சந்தைப் பகுதியில் நவீன பஸ் நிலையம் அமைக்கப் படவுள்ளதால் ரி.சி.லேனில் உள்ள காணிக்குப் புதியசந்தை இடமாற்றப் படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(க-185)

## கிராமிய அபிவிருத்தி அலுவலருக்கான பயிற்சி நெறி

தென்மராட்சி,செப்.10

வடக்கு - கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் பணிபுரியும் கிராமிய அபிவிருத்தி அலுவலர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி செயலமர்வுகள் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை திருகோணமலை கிராமிய அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-117)

## மாடிக் கட்டட வேலை ஆரம்பம்

சண்டிலிப்பாய்,செப்.10

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்படவுள்ள மாடிக் கட்டடத்திற்கான கட்டட வேலைகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. (க-135)


உ
ஓம் சக்தி அம்பாள் துணை

## திருமணத் திருமுகம்

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித் திங்கள் 25ஆம் நாள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை காலை 6.36 மணிமுதல் 8.22 மணிவரையான கன்னி லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**ஸ்ரீகாந்தன் (ஸ்ரீ)**
(ஜேர்மனி)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**றோஜினி (றோஜி)**
(இலங்கை)
அவர்களுக்கும்

எல்லாம்வல்ல வதிரி உல்லியநொல்லை அம்பாளினதும் ஊற்றங்கரை சித்தி விநாயகப் பெருமானினதும் திருவருள் துணைகொண்டு சென்னை மயூரியா விடுதியில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெறுகிறது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்: *மயூரியா விடுதி. 168/169 ஆக்கொற் வீதி. வடபழநி. சென்னை 0091444840047.*

இங்ஙனம்:

திரு.திருமதி வே.கந்தசாமிக்குருக்கள்
அம்மன் கோயில்,
வதிரி, கரவெட்டி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி அ.கணேஸ்ஐயர்
ஊற்றங்கரை வீதி,
தண்ணீரூற்று,
முள்ளியவளை, முல்லைத்தீவு.

(இரு வீட்டார் அழைப்பு)

(92134)


## கல்விச்சாலைக் காட்சிகள்



புனித சாள்ஸ் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய மாணவன் த.கென்றி றீகனுக்கு இளைப்பாறிய ஆசிரியர் எஸ்.மரியதாஸ் பரிசில் வழங்குவதையும் -

மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் தட்டெறிதல் நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்ற செல்வி கு.பவித்திராவுக்கு அதிபர் திருமதி பீ.எவ்.சின்னத்துரை வங்கி வைப்புப் புத்தகத்தினை வழங்குவதையும் படத்தில் காணலாம். (ஐ-17)



யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜா, திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மேடையில் உள்ளனர். (ஐ)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வியமைச்சினால் 80 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் படவுள்ள நவீன விஞ்ஞான ஆய்வுகூட மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா நட்டு வைப்பதையும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், அபிவிருத்திச் சபை உறுப்பினர் எஸ்.திருச்செல்வம் உட்பட வைபவத்தில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



இணுவில் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெற்றன.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், நிறுவுநர் தின உரையாற்றிய தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர் கலாநிதி தா.அமிர்தலிங்கம், உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஆகியோர் அழைத்துவரப்படுகின்ற காட்சி.

*(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

# அரசியல்வாதிகளின் கவனம் நாட்டின் பொருளாதாரம் மீது திரும்பவேண்டும்

## சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி கூறுகிறார்

கொழும்பு,செப்.10

முதலீடுகளை ஊக்குவிக்கவும் நாட்டை பொருளாதாரத்துறையில் கட்டிவளர்க்கவும் அரசியலில் ஈடுபட்டுள்ள அனைவருமே பொருளாதார விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி நதீம் அல் ஹக் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஜே.வி.பியுடன் செய்துகொண்ட உடன்பாடு சர்வதேச நாணயநிதியத்துடன் அரசு ஏற்கனவே செய்துகொண்ட ஏற்பாடுகளைப் பாதிக்கும் எனக் கூறப்படுவதுபற்றிக் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அரசியலை ஒருபுறம் விட்டு விடுங்கள். பொருளாதார முன்னேற்றத்திற்காக எல்லோரும் ஒருமித்து உழைக்கவேண்டும். இது, பலரும் எதிர்பார்ப்பதுபோல நல்லதொரு ஆட்சியின் கீழேயே நடைபெறக் கூடியது" - எனக் கூறிய அவர், தான் அரசியல் ரீதியான உடன்பாடுகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

"இலங்கையில் பொருளாதாரம் பாரதூரமான அளவுக்கு கீழிறங்கி விட்டது. அதனை மீளக்கட்டியெழுப்புதல் வேண்டும். ஒரு பொருளியல் நிபுணரென்ற வகையில் இதனை நான் செய்ய விரும்புகிறேன்.

"உறுதியான அரசும், நல்லாட்சியும் அமையுமாயின் அரசாங்கம் வறிய மக்கள் மீதான பொருளாதாரச்சுமைகளைக் குறைக்கவும், வரவு செலவுத் திட்டத்தில் நிதிப்பற்றாக் குறையை 8.5 சதவீதத்தினுள் கட்டுப்படுத்தி வைத்திருக்கவும் முடியும். உள்நாட்டின் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்ட வேண்டும். முதலீடுகளை தடங்கல் செய்யக்கூடிய, கட்டமைப்பு ரீதியான இறுக்கங்கள் விலக்கப்படல் வேண்டும். பொருளாதார வளர்ச்சி இதன் மூலமே ஏற்பட முடியும் எனவே சகல அரசியல் கட்சிகளும் பொருளாதார கொள்கையில் தமது கவனத்தை ஒருங்கமைத்து பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்தல் வேண்டும்" - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)


**இணுவில் கிழக்கு அருள்மிகு அண்ணமார் கிருஷ்ணர் ஆலயம்**

**சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா**

*காலம்:-* இன்று (10.09.2001) திங்கட்கிழமை பி.ப. 4 மணி

*இடம் :-* ஆலயமுன்றில்

பிரதம விருந்தினர்கள் :-
※ உயர்திரு. க.மணிபல்லவராஜன J.P.U.M. (நல்லூர் பிரதேச சபைத் தலைவர், யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர்)
※ உயர்திரு. க.கமலசேகரன் J.P.U.M. (வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர், சுன்னாகம்)

சிறப்பு விருந்தினர்கள் :-
※ திரு.K.துரைசிங்கம் J.P. (உறுப்பினர், வலி.தெற்கு பிரதேச சபை)
※ திரு.துரை.தவராஜா J.P. (நல்லூர் பிரதேச சபை உபதலைவர், கௌரவ ஆலோசகர், வடபிராந்திய இந்துப் பேரவை)
※ திரு.தி.புரந்தரதாசன் (கிராமசேவையாளர், இணுவில் கிழக்கு)
※ திரு.S.இலகுநாதன் (தலைவர், இந்து விளையாட்டுக் கழகம், இணுவில், பிரபல சமூக சேவையாளர்)

*சிறப்பு நிகழ்ச்சி* :- யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் பட்டி மண்டபம்

❖ தலைப்பு

தற்கால ஆலய மரபு

★ மாற்றப்பட வேண்டும் ★ தொடர்ந்து பேணப்படவேண்டும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- பரிபாலன சபை,
அருள்மிகு அண்ணமார் கிருஷ்ணர் ஆலயம்.

*இணுவில்.*
(C/18205)



**ஆங்கிலம்/தமிழ் தட்டெழுத்தாளர் தேவை**

காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை ஆங்கிலம/தமிழ் தட்டச்சு செய்வதற்கான அனுபவமிக்க தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்) தேவை. 2001.09.15க்கு முன்பதாக நேரில் தொடர்பு கொண்டு அனுபவத்திற்கேற்ப ஊதியத்தைத் தீர்மானித்துக்கொள்ளலாம்.

**ஆங்கிலம்/தமிழ் தட்டச்சு வகுப்புக்கள் 01.10.2001 முதல் ஆரம்பம்.**

தட்டச்சு, மொழி பெயர்ப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு கடிதங்கள் வரைதல், படிவங்கள் நிரப்பல் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) ஆகியன சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்தவரால் செய்து கொடுக்கப்படும்.

**கணதிரு தொலைத் தொடர்பு நிலையம்**

'திருப்பதி', மானிப்பாய் வீதி, உடுவில். (92141)



**YOGI HOME SCIENCE ACADEMY**

புதிய வகுப்புகள் 21.09.2001 வெள்ளி முதல் ஆரம்பமாக உள்ளன.

1) இலகு வழித் தையல் (Cutting Classes)
2) கேக் ஐசிங் (Birthday and Occasional Cakes)
3) சமையற்கலை (General Cokkery)
4) பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
5) Fabric Painting

**விசேட பயிற்சி நெறிகள்**

1) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும் மாச்சினி மலர் அலங்காரங்களும் (Fondant Icing Structures and Sugar Flowers)
2) அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும் இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்களும் அளிக்கப்படும். (15 வகுப்புகள் மட்டும்)

ஒப்பனை செய்முறைகள்:-

1) இந்து, கிறிஸ்தவ மணமகள் அலங்காரம்
2) சாதாரண ஒப்பனை
3) எண்ணெய் பசையுடன் கூடிய ஒப்பனை
4) எண்ணெய் உள்ள சருமத்துக்கான ஒப்பனை
5) நவீன தலை அலங்காரங்கள்
6) இந்திய, சிங்கள, குஜராட்டி மற்றும் மடிசார் போன்ற வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.

*வட்டுக்கோட்டையிலும் வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.*

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
(வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)

(92096)



**எமது பிரமிட் & கொலம்பியா ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்**

- பொன்னுமணி
- தெய்வமகன்
- சிகரம்
- ரத்தபாசம்
- சிப்பிக்குள் முத்து
- சுவரில்லா சித்திரங்கள்
- தீ
- ரங்கா
- நெற்றிக்கண்
- தியாகம்
- சாட்சி
- வீடிவெள்ளி
- ஆடிவெள்ளி
- புனித அந்தோனியார்
- மன்மதலீலை
- பட்டிக்காட்டுதம்பி
- நேற்று இன்று நாளை
- மலையூர் மம்பட்டியான்
- பாதகாணிக்கை
- படித்தால் மட்டும் போதுமா
- திருநீலகண்டர்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்
(C/18208)



**தேவை**

யாழ். நகரில் இயங்கும் ஸ்ருடியோ நிறுவனம் ஒன்றுக்கு காசாளர் தேவை

*தொடர்பு:-*
விளம்பர இல. 1362,
மே/பா உதயன். (92143)



**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
அர்ஜுன், சோனாலி
மற்றும் பலர் நடிப்பில

**கண்ணோடு காண்பதெல்லாம்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.5 (புதிய நேரம்)
(C/18074)



**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி
நடிப்பில்

**மன்னன்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
(92117)


# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம் விநாயக்மூர்த்தி (வேதம்)

(இளைப்பாறிய பிரதம எழுதுநர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை - பருத்தித்துறை)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட தாமோதரம் விநாயகமூர்த்தி (வேதம்) நேற்று (09.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குக் காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலாசினி மற்றும் கேதீஸ்வரன் (ஆண் தாதிய உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பத்மாசினி (மொழிபெயர்ப்பாளர் - கொழும்பு), சரகணபவதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுதாகர் (சாலை முகாமையாளர் - கல்முனை), இந்திராதேவி, கௌரி (ஜேர்மனி), சுகுணா (கொழும்பு) ஆகியோரின் மாமனாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"திலகஸ்தான்"
*துன்னாலை கிழக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/18200)

## கந்தவனம் பொன்னையா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் பொன்னையா (06.09.2001) வியாழக்கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் தம்பதிகளின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், நளினி, றஜனி, ராகினி, கிரிதரன், காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகேசம்பிள்ளை, கோபாலகிருஸ்ணன், சிறீபிரகாசன், வாசுகி, சுகந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோத், விஜே, அனுஜா, கோபன், விரோஷன், விதுஷன், சுவர்ணியா, அருண் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பு, கதிரவேலு, சின்னாச்சிப்பிள்ளை மற்றும் நன்னித்தம்பி (கனடா), பொன்னுப்பிள்ளை (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (92142)

தகவல்:
செ.பொன்னுப்பிள்ளை (சகோதரி),
திருமதி இராசரத்தினம் (மருமகள்)

## பொன்னுத்துரை சிங்கராஜா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிங்கராஜா 08.09.2001 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரி, வரதேஸ்வரி, லிங்கேஸ்வரி, ரவிச்சந்திரன், மங்களேஸ்வரி, வத்சலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சந்துரு சிறிஸ்கந்தராஜா, கமலநாதன், ஜெயக்குமார், சுமதி ஆகியோரின் மாமனாரும், பூபாலசிங்கம், விஜியரத்தினம், வசந்தகுமார், சாராததேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிர்காமநாதன் (M.R.), நித்தியானந்தன், தர்மரத்தினம், செல்வராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.09.2001 புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
*(பெற்றோல்செற் முன் ஒழுங்கை)*

தகவல்:
பிள்ளைகள்.

(C/18207)

## விநாசித்தம்பி சோமசுந்தரம்

(மேல் நீதிமன்ற நீதிவான் திரு. N. இராமச்சந்திரன் அவர்களின் முன்னாள் லிகிதர்)

தம்பசிட்டியை பிறப்பிடமாகவும் முதலாம் கட்டை புலோலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சோமசுந்தரம் நேற்று (09.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்துவின் அன்புக் கணவரும், பத்மநாதன், இராமநாதன் (லண்டன்), சண்முகநாதன் (லண்டன்), திருமதி இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இராஜமலர், திருமதி இந்திரா (லண்டன்), திருமதி யசோ (லண்டன்), குகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*முதலாம் கட்டை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

(C/18209)

தகவல்:
சோ. பத்மநாதன் (மகன்)

## சின்னத்துரை சிவசம்பு

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவசம்பு நேற்று (09.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை செல்லம்மாவின் அன்பு மகனும், மகேந்திராணியின் அன்புக் கணவரும், யசோதா (யாழ்.பல்கலைக்கழக கலைப் பிரிவு - முதலாம் வருடம்), சோபிதா (பிரான்ஸ்), ரசிதா, சரவணபவன், லாவன்யா (இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாகரன் (பிரான்ஸ்) அவர்களின் மாமனாரும், சாரதாதேவி, தங்கரத்தினம், சறோஜினிதேவி, இந்திராணி, காலஞ்சென்ற சரஸ்வதி, இராசேந்திரம், மாலினி, இராசலஷ்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மகாலிங்கம், நாகையா, நீதிராசா, பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், அமிதகௌரி, சிவலிங்கம், பிரியநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2001) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இணுவில் தெற்கு.*

தகவல்:
மு.சண்முகன் (மைத்துனர்)

(C/18210) (ஜங்கரன் பந்தல் சேவை)

நாளை புதிய பிரிவு
ஆரம்பமாகிறது.
11.09.2001 செவ்வாய் காலை 7.00 மணி

**ENGLISH**
**Spoken and Grammar**
by: BRITTO

வழமையான வகுப்புகள்
செவ்வாய்-வியாழன்
7.00 மணி

**SUBRA (14)**
சித்தன்கேணி.
(C/18089)



மிகச் சொற்ப பிரதிகளே
விற்பனையாகின்றன

**A/L 2001**
**LOGIC**
புள்ளி வழங்கும் திட்டம்

வெளியீடு:
**LOGICAL REGIONAL CENTER**
**SRILANKA.**

கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம்,
ஸ்ரீ சுப்பிரமணிய ஆர்க்கா
புத்தகசாலைகள். (92144)



## பராமரிப்பும் திருத்துதலும்

கணனி, உதிரிப்பாகங்கள்
போட்டோ பிரதி இயந்திரம்
றோணியோ இயந்திரம்
தட்டச்சு இயந்திரம்
ரீ.வி, டெக், றேடியோ

மற்றும் சகல விதமான மின்னியல், இலத்திரனியல் சாதனங்களும் தகுதிவாய்ந்தவர்களினால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

யூரோவில் எலக்ரோனிக்ஸ் (தவது) வது.
**Euroville Electronics (Pvt) Ltd.**
*51, யமுனா வீதி,*
*நல்லூர்.*
தொலைபேசி:- 021-2849
**email: eurovil @sltnet.lk** (92087)



## VIDEO EDITING பயிற்சிநெறி

கணனி மூலம் வீடியோ எடிற்றிங், மைற்றில்,
மிக்சிங் செய்வதற்கான பயிற்சி வகுப்புகள்
புதிய பிரிவு சில தினங்களில்
ஆரம்பம்.

விவரங்களுக்கு:- KINGSTON ELECTRONICS,
No.37, Clock Tower Road,
Jaffna. T.P. - 021-3140
(92082)



விண்ணப்பித்து விட்டீர்களா ?
IBMS இன் புலமைப்பரிசில் திட்டம் 2001/2002

IBMS




மாணவர்களே !
நவீன கணனித் தகவல் தொழில் நுட்பத்தை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள எம்முடன் இணையுங்கள். பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து Director, IBMS, No 701, K.K.S Road, Jaffna எனும் முகவரிக்கு 12/09/2001 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.

மாதிரி விண்ணப்பப் படிவம்
Full Name : ____
Address (Perm & Tem) : ____
N.I.C/ Spe.I.C No : ____
Sex : ____ Date of Birth : ____
Course : ____
Signature : ____ Date : ____




*Head Office :* **IBMS,**
*[Affiliated to Barrington University of USA]*
*No.701, K.K.S Road, Jaffna.*
Phone: 021-3165 Email: ibmsjaf@yahoo.com

*Branches:*
*Nelliyady.*
*Chankanai.*


## நாகர்கோயிலில் தாக்குதல்

கொழும்பு,செப்.10

நாகர்கோயில் முன்னரங்க நிலைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று முற பகல் 11 மணியளவில் ரோந்து சென்ற படையினர் விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகளை தாக்கி அழித்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இதன்போது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகளின் மூன்று உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

அதே தினம் கொடிகாமம் பகுதியில் கைவிடப்பட்டிருந்த வீடொன்றின் குசினியில் இருந்து 'ரி 56' ரக துப்பாக்கி ஒன்றைப் படையினர் கைப்பற்றியதாகவும் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-3)


IIS

**INFOTECH.JAFF-2001**
கணனிக் கண்காட்சி
ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கண்காட்சி நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
இயக்குநர்
(C/18202) **IIS, யாழ்ப்பாணம்.**



**NEW SCIENCE COLLEGE**
JAFFNA

பௌதிகவியல்
**M.KARUNANITHY**
சடப்பொருளியல்
புதன், வியாழன்
4.30 - 6.00
ஆரம்பம்:
12-09-2001 புதன்
(92140)



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
**A/L 2002**
பொருளியல்
**ரதராஜன்**

★ பணம், வங்கி
★ சர்வதேச பொருளியல்
★ வினா-விடை வகுப்பு
ஆரம்பம்:- 11-09-2001
செவ்வாய் 3.00-6.00 மணிவரை (92062)



# இனி உங்கள் திட்டம் ?

நீங்களே முடிவெடுங்கள்
ஆனால், நாங்கள் வழிகாட்டுவோம்.

## இலவச கணனி வழிகாட்டல் கருத்தரங்கு

எதிர்வரும் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில்
காலை 10.00 மணியிலிருந்து

அனுபவமும் திறமையும் மிக்க விரிவுரையாளர்களின் விரிவுரைகள், மற்றும் செய்முறை விளக்கங்களுடன் கூடிய இத்தொடர் இலவசக் கருத்தரங்கில்

1. கணனியின் அறிமுகம்
2. கணனியின் பிரயோகம்
3. *Internet & E mail*
4. கணனியை எவ்வாறு தெரிவு செய்வது
5. *Information Technology*
6. கணனித்துறைசார் வேலைவாய்ப்பு/ மேற்படிப்பு
7. இவற்றிற்கான செய்முறை விளக்கங்கள் *(Practicals)*

இக்கருத்தரங்கின் மூலம், நீங்கள் கற்க வேண்டிய கற்கை நெறியைத் தெரிவு செய்ய உதவுவதுடன் தமிழ்மொழிமூல குறிப்புரைகளுடன் அவற்றுக்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும்
பயன் பெறலாம்



குறிப்பு: முற்கூட்டியே பதிவு செய்வதன் மூலம் தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

*It is Easy Solution for your Future*

**STP** *In Two Years Service.*
*As a Leading Computer Education Center in Jaffna Peninsula.*
No:54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P. 2674, E-mail: stpedu@hotmail.com



# ஈசன் கல்வி நிலையம்

# GENERAL ENGLISH

☆ பாடசாலையிலிருந்து விலகியோருக்கும் உயர்கல்வி தொடர்வோருக்கும் உரியது!

**Covers all Language Skills**
**Speaking, Reading,**
**Writing and Grammar**

★ சகல மொழித்திறன்களுடன் கூடிய கற்கைநெறி
✦ ஆரம்பம்:- 15-09-2001 (SAT)
10.00 a.m.

வாரத்தில் இரு நாள்கள் - சனி, ஞாயிறு

ஆசிரியர்:- த.ந.பஞ்சாட்சரம் (92080)

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.



# JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA - SRILANKA

*Regd No.15251 T.P.3335*

தொழிற் பயிற்சிகள்

➢ **Radio, T.V.and Video Deck Repairing**

சகல இன றேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

*(காலம் 10 மாதங்கள்)*

➢ **Motor Rewinding and Electrical Wiring**

சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும்.

*(காலம் 6 மாதங்கள்)*

➢ **Motor Cycle Mechanism**

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

*(காலம் 5 மாதங்கள்)*

➢ **Air Conditioning and Refrigeration**

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார்கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.

*(காலம் 6 மாதங்கள்)*

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
14.09.2001 (கிழமை நாள்களில்)
15.09.2001 (சனி, ஞாயிறு நாள்களில்)

*266/1, Stanley Road,*
*Jaffna.*
*(றெயில்வே கடவை அருகில்)*

(C/18204)

**DIRECTOR**
No.07, Palaly Road,
Jaffna.



# Computer Courses

புதிய பிரிவுகள் யாவும் ஆரம்பித்துள்ளன

| பாடநெறி | காலம் (மாதங்கள்) | கட்டணம் |
|---|---|---|
| Diploma in MS Office | 5 | 1,000/= |
| Diploma in Internet Technology | 4 | 1,500/= |
| Diploma in Java Programming | 5 | 2,000/= |
| Diploma in Visual Basic Programming | 5 | 500/= |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 2,500/= |
| Technician Diploma in Computer Hardware | 6 | 1,500/= |
| Advanced Diploma in Applied Computer Science | 12 | 10,000/= |

எமது அனைத்து Diploma பயிற்சி நெறிகளுக்கும் மேற்குறிப்பிட்ட கட்டணம் மட்டுமே அறவிடப்படும். பதிவுக் கட்டணங்கள் வழமைக்கு மாறாக மேலதிகமாக அறவிடப்படமாட்டாது.

எமது கட்டணங்கள் தொடர்பான தவறான பிரச்சாரங்களுக்கு ஆளாகாமல் விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

IIS
**Institute of Informatics Studies**
Head Office :
100, Clock Tower Road, Jaffna. ☎ 021-2831 Email : iis@sltnet.lk
Branches :
Nelliyady Karaveddy. Main Street, Chankanai.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.